வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

08.01.2021 வெள்ளிக்கிழமை




# வடக்கு - கிழக்கு இணைந்த தனிப் பிராந்தியம்: கூட்டமைப்பினரின் யோசனை ஜெய்சங்கரிடம்

## நேரில் கையளித்தார் தலைவர் சம்பந்தன்



கொழும்பு, ஜன. 08

வடக்கு - கிழக்கு இணைந்த தனிப் பிராந்தியம் உள்ளிட்ட பல பரிந்துரைகளை உள்ளடக்கி புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மையில் சமர்ப்பித்திருந்த யோசனைத் திட்ட வரைபு, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் நேற்று நேரில் கையளிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த வரைபைக் கைய

02

# தமிழ் மக்களுக்கு நீதியுடன் தீர்வும் கிடைக்க வேண்டும்!

## இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று கூட்டமைப்புடனான சந்திப்பில் ஜெய்சங்கர் திட்டவட்டம்



கொழும்பு, ஜனவரி 08

“இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்துடன் நிரந்தர அரசியல் தீர்வும் வழங்கப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது. இதில் மாற்றம் எதுவும் இல்லை.”

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

02

# மக்களின் வேதனையில் அரசாங்கம் வியாபாரம்

## சபையில் அநுர சாடல்



கொழும்பு, ஜன.08

வெள்ளையர்களுக்கு சொகுசு சுற்றுலா வசதிகளைச் செய்துகொடுக்கும் அரசாங்கம் மத்திய கிழக்கில் சிக்கித்தவிக்கும் எமது மக்களைப் பாதுகாப்பாக கொண்டுவருவதில் வியாபாரம் செய்கின்றது. எமது மக்களின் வேத

02

# கொரோனாவால் மூவர் மரணம்!

## உயிரிழப்பு 222 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜன.08

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மேலும் மூவர் உயிரிழந்தனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் மீதிரிகல பகுதியைச் சேர்ந்த 53 வயது ஆண் ஒருவரும், பேருவளைப் பகுதியைச் சேர்ந்த 62 வயது ஆண் ஒருவரும் மற்றும் கொழும்பு 14 ஐ சேர்ந்த 89

02

# யாழ். மருத்துவபீட மாணவனுக்கு தொற்று

## 10 பேர் தனிமையில் உணவகம் முடக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 08

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

02

# இத்தருணத்திலாவது கருணை காட்டுங்கள்

## அரசியல் கைதிகளின் உறவினர்கள் யாழில் கண்ணீர் மல்கக் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன.08

கொரோனா வைரஸ் தொற்றால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் இத்தருணத்திலாவது விடுதலை செய்யவேண்டும் எனக் கைதிகளின்

02

# வடமாகாணத்தில் நேற்று 11 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம்,ஜன.08

வடக்கு மாகாணத்தில் நேற்று 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

11 பேரில் இருவர் மருதனார்மடம் கொத்

02

# மது என நினைத்து ரின்னரை குடித்த இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 08

மதுபானம் என நினைத்து ரின்னரை குடித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்

02

# கரவெட்டியில் பிரத்தியேக வகுப்பு நடத்திய பாடசாலை மூடப்பட்டது

## அதிபர், ஆசிரியர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஜன. 08

கொவிட் -19 சுகாதார நடைமுறைகளை மீறி தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு பிரேத்தியேக வகுப்பு நடத்திய பாடசாலை மூடப்பட்டதுடன் அதிபர், ஆசிரியர் இருவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கரவெட்டி சுகாதார

02

# ஈழத் தமிழர்களை இந்தியா அடியோடு கைகழுவிவிட்டது

## பழ. நெடுமாறன் கடும் கண்டனம்

சென்னை, ஜன. 08

“இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் ஈழத் தமிழர்களை இந்திய அரசாங்கம் அடியோடு கைகழுவி விட்டது” என்றுகூறி அதற்கு கடும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார் பழ. நெடுமாறன்.

02

# கிளிநொச்சியில் உயிரிழந்த யாசகரிடம் 1 லட்சம் பணம்!

கிளிநொச்சி, ஜன. 08

கிளிநொச்சியில் உயிரிழந்த யாசகர் ஒருவரின் உடைமையில் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் இருந்ததாக தெரிவிக்கப்

02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## வடமாகாணத்தில்...

தணியுடன் தொடர்புடையவர்கள், 7 பேர் பூநகரியைச் சேர்ந்தவர்கள் மற்றும் இருவர் மருதங்கேணியைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடங்களில் நேற்று இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவர்கள் 11 பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

பூநகரியைச் சேர்ந்த 11 பேர் வெளிநாடு செல்ல கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளனர். அவர்களிடம் அந்த விடுதியில் வைத்து மாதிரிகள் பெறப்பட்டன. இதனால் அவர்கள் அங்கிருந்து தப்பித்து பூநகரிக்குத் திரும்பி வந்துள்ளனர்.

இவ்வாறு இவர்கள் தப்பி வந்தமை தொடர்பில் கொழும்பிலிருந்து வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. அத்தோடு மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது தொடர்பிலும் கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுள்ள மூவரையும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைத்த அதிகாரிகள் ஏனைய 8 பேரையும் சுயதனிமைப்படுத்தியிருந்தனர்.

இந்த 8 பேரின் மாதிரிகள் நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதில் 7 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மருதங்கேணியில் கொழும்பு சென்று திரும்பிய இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடைய சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்கும், உடுவிலைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று 248 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் போதே இவர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது- என்றார். (அ-எ)

## தமிழ் மக்களுக்கு...

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார். குறித்த சந்திப்பு கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஒருமித்த நாட்டுக்குள்தான் தமிழர்கள் தீர்வு கேட்கின்றார்கள். எனவே, அவர்களின் அபிலாஷைகளான நீதி, சமாதானம், சமத்துவம், கௌரவம் உள்ளடங்கலான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது இலங்கை அரசின் பிரதான கடமை என்பதை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில் நான் எடுத்துரைத்துள்ளேன்.

மாகாண சபை முறைமையில் மாற்றம் வேண்டாம் எனவும், விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் இலங்கை அரசிடம் நான் வலியுறுத்தியுள்ளேன்.

இந்தியாவினதும் இலங்கையினதும் இணக்கத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்து உதவிகளைச் செய்யும். போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலனில் இந்தியா அதிக சிரத்தை கொண்டுள்ளது.

பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை துறைமுகம் ஆகியவற்றின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது குறித்து இலங்கை அரசுடன் பேச்சை ஆரம்பித்துள்ளோம். அவற்றின் இயக்கம் தொடர முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” - என்றார்.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் கலந்து கொண்டார். (அ)

## வடக்கு - கிழக்கு...

ளித்தார். இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போது, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதன்போதே தமது யோசனைத் திட்டத்தை ஜெய்சங்கரிடம் சம்பந்தன் கையளித்தார்.

21 பக்கங்களைக் கொண்ட இந்த யோசனைத் திட்ட வரைபில், ”புதிய அரசமைப்பில் மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாக தமிழ் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு - கிழக்கு இருத்தல் வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுமானால் அவர்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் வெளிப்புற சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நினைவுபடுத்துகின்றோம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

## யாழ். மருத்துவபீட...

இதையடுத்து, அவரின் நண்பர்கள் 10 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். அத்துடன் அவர்கள் உணவருந்திய உணவகத்தையும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முடக்கியுள்ளது.

நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே கச்சேரி - நல்லூர் வீதியில் வசிக்கும் மருத்துவபீட மாணவனுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மாத்தளையை சேர்ந்த அந்த மாணவன், கடந்த 5ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்திருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை அவரின் தாயாருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் உடனடியாக யாழ்ப்பாணம் சுகாதாரப் பிரிவினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. யாழ். மாநகர சுகாதார சேவைகள் பணிமனை குறித்த மாணவனிடம் இருந்து உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளை பெற்று ஆய்வுகூடத்திற்கு அனுப்பினர்.

பரிசோதனையில் மாணவனுக்கு தொற்று இருப்பது உறுதியானதும், அவருடன் தங்கியிருந்த ஆறு நண்பர்களையும் தனிமைப்படுத்தப்பட்டனர். அத்துடன், ஒட்டுமடத்தில் வீடு ஒன்றில் தங்கியுள்ள நான்கு நண்பர்களைச் சந்தித்திருந்தமையால் அவர்களும் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தொற்றுக்கு உள்ளான மாணவரும் தனிமைப்படுத்தப்பட்ட அவரின் நண்பர்களும் வழக்கமாக உணவருந்தும் ஆனைப்பந்தி சந்தியிலுள்ள பிரபல உணவகத்தை முடக்கிய யாழ். மாநகர சுகாதார சேவைகள்பணிமனை, அனைத்து பணியாளர்களையும் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறும் பணித்துள்ளனர். (ஐ-எ)

## ஈழத் தமிழர்களை...

இந்த விடயம் குறித்து அவர் விடுத்த அறிக்கையில்

“இலங்கையில் வாழும் சிறுபான்மையினரான தமிழர்களுக்கான உரிமைகளை வழங்குவது, அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வது, சமத்துவத்தை ஏற்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்களில் அந்நாட்டு அரசாங்கமே முடிவெடுக்க வேண்டும். இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், அந்நாட்டு அரசாங்கம் தான் முடிவெடுக்க வேண்டும்” என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இலங்கையின் ஜனாதிபதியையும், வெளியுறவுத் துறை அமைச்சரையும் சந்தித்துப் பேசிய பிறகு கொழும்பில் இருந்து இவ்வாறு தெரிவித்திருப்பது அதிர்ச்சியை அளிக்கிறது.

இலங்கையில் வாழும் தமிழரை இன ரீதியாகத் திட்டமிட்டுப் பல வகையிலும் ஒடுக்கியும், அவர்களின் உரிமைகளை அடியோடு பறித்தும், அநீதியை இழைத்தும் வரும் இலங்கை அரசாங்கம், ஈழத் தமிழர்களுக்கு எல்லாவற்றையும் வழங்கும் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அறிவித்திருப்பதை மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். குற்றவாளியே நீதி வழங்குவார் என அமைச்சர் கூறியிருப்பது கேலிக் கூத்தாகும்.

1987ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை அரசாங்கங்கள் செய்த உடன்பாட்டில் எந்தப் பிரிவையும் இலங்கை அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை. 13ஆவது சட்டத் திருத்தத்தை மதிக்கவும் இல்லை. இந்திய-இலங்கை அரசாங்கங்கள் செய்து கொண்ட உடன்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என வற்புறுத்த வேண்டிய இந்திய அரசாங்கம், ஈழத் தமிழர்களை அடியோடு கைகழுவி விட்டது என்பதையே வெளியுறவுத் துறை அமைச்சரின் அறிவிப்பு எடுத்துக்காட்டுகிறது”- என்றுள்ளது.

## மக்களின்...

னையில் வியாபாரம் செய்வதை எண்ணி இந்த அரசாங்கம் வெட்கப்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபையில் கடுமையாகச் சாடினார்.

இன்று மத்திய கிழக்கில் தொழிலை இழந்துள்ள எமது பெண்கள் தமது வாழ்வாதாரத்துக்காக விபசாரத்தில் ஈடுபடும் மிக மோசமான நிலைமை உருவாகியுள்ளது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (அ-எ)

## இத்தருணத்...

உறவினர்கள் சர்வமதத் தலைவர்கள் முன்னிலையில் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சர்வமதக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறைமீட்போம் எனும் தொனிப் பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பால், இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறை இருட்டில் இருக்கும் எமது உறவுகளை கொரோனா வைரஸ் தொற்றும் வெகுவாகப் பாதித்துவரும் நிலையில் கருணை அடிப்படையில் இத்தருணத்திலாவது விடுவிக்கவேண்டும் என்று இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள சர்வமதப் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் சிறையிலுள்ள எமது உறவுகளை விடுவிக்க மதத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கண்ணீர் மல்க உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் மதத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## கொரோனாவால்...

வயது ஆண் ஒருவருமே இவ்வாறு கொரோனா தொற்றால் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 222 ஆக அதிகரித்துள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 46 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்று இரவு 7 மணிவரை 255 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இவர்களில் 201 தொற்றாளர்கள் பேலியகொடை கொத்தணியுடனும், 54 தொற்றாளர்கள் சிறைச்சாலைக் கொத்தணியுடனும் தொடர்புடையவர்களாவர்.

இதற்கமைய இரண்டாம் அலையில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 753 ஆகவும் மொத்தத் தொற்றார் எண்ணிக்கை 46 ஆயிரத்து 503 ஆகவும் உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 39 ஆயிரத்து 661 தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதோடு 6 ஆயிரத்து 623 தொற்றாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-எ)

## கிளிநொச்சியில்...

படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த 3 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த இவர், நேற்று உயிரிழந்துள்ளார். இந்த நபர் கிளி நொச்சி நகரத்தில் யாசகம் பெற்றுவருபவர் என்று தெரிய வருகின்றது.

அவர் உயிரிழந்த பின்னர் அவரது உடைமைகளை ஆராய்ந்தபோது, அதற்குள் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பணம் இருந்துள்ளது. இவரது உறவினர்கள் எவரையும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உடல் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கரவெட்டியில்...

மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமைய வதிரி திருஇருதயக் கல்லூரியே இவ்வாறு நேற்று தொடக்கம் 20ஆம் திகதிவரை மூடப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதியைப் பெறாது தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு பாடசாலையில் நேற்று பிரத்தியேக வகுப்பு நடத்தப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளை மீறி வகுப்பு நடத்தப்படுவதாக சுகாதாரத் துறையினருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர், மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பிவைத்தனர்.

பாடசாலையின் அதிபர், வகுப்பு நடத்திய ஆசிரியரை அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தியதுடன், பாடசாலையை மூடி அறிவித்தல் ஒட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மது என...

பிள்ளை ஜனாதீபன் (வயது-36 ) என்பவரே உயிரிழந்தார் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் வர்ணப்பூச்சு வேலை இடம்பெற்றுள்ளது. அதற்காக கால் போத்தல் சாராயப் போத்தலில் ரின்னர் விட்டு வைக்கப்பட்டுள்ளது.

போத்தலில் ரின்னர் இருப்பது தெரியாததால் சாராயம் என நினைத்து நேற்றுக் காலை 9 மணியளவில் இளைஞர் குடித்துள்ளார். அவர் குடித்துவிட்டு கிடக்கிறார் என வீட்டில் உள்ளவர்கள் விட்டுள்ளனர்.

எனினும் பிற்பகல் 2 மணியளவில் அவர் மயக்கமுற்று இருப்பதையறிந்த உறவினர்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அவரை அனுமதித்துள்ளனர்.

எனினும் ஒருமணி நேர சிகிச்சையின் பின் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் நேற்று விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu
08.01.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, மார்கழி 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## ஜெய்சங்கர் கூட்டமைப்பிடம் கூறியது

மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. ஜெயசங்கர், நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். இதன்போது, அரசியல் தீர்வில் இந்தியா தொடர்ந்தும் கரிசனையுடன் இருக்குமென்று தெரிவித்திருக்கின்றார். ஆனால், ஒரு விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றார். அதாவது, நீங்கள் இருப்பதை பாதுகாக்கப் போகின்றீர்களா அல்லது புதிய ஒன்றை நோக்கிச் செல்லப் போகின்றார்களா? புதிய ஒன்றை நோக்கிப் பயணிப்பதில் தவறில்லை; ஆனால், ஒரு வேளை அது தோல்வியில் முடிந்தால் என்ன செய்வீர்கள்?

இதன் மூலம் இருக்கின்ற 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட, மாகாண சபை முறைமையையும் கைவிடப் போகின்றீர்களா அல்லது அதனை பாதுகாக்கப் போகின்றீர்களா? இந்தக் கேள்வியால் சற்று திணறிப்போன கூட்டமைப்பு, ஒருமித்த குரலில், இருப்பதை பாதுகாத்துக் கொண்டுதான் இன்னொன்றைப் பற்றி யோசிக்க வேண்டுமென்று பதலளித்திருக்கின்றது.

அதேவேளை, பிறிதொரு விடயத்தையும் ஜெய்சங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதாவது, நீங்கள் உங்களுக்குள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்; இல்லையேல், அது விடயங்களை கையாளுவதற்கு இடையூறாக அமைந்துவிடலாம். இந்திய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கூறியதற்கு பின்னால் பிறிதொரு காரணம் உண்டு. அதாவது, இம்முறை அரசாங்கத்தின் சார்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள், அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களையும் ஜெய்சங்கர் சந்தித்திருக்கின்றார்.

மட்டக்களப்பில் பொதுஜன பெரமுனவின் சார்பில் தெரிவான, வியாழேந்திரனை, ஜெயசங்கர் தனியாக சந்தித்திருக்கின்றார். ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் தெரிவானவர்களை தனியாக சந்தித்திருக்கின்றார். இதற்கான ஏற்பாடுகளை அரசாங்கமே மேற்கொண்டிருக்கின்றது. வியாழேந்திரன், கிழக்கு புறக்கணிக்கப்படுகின்றது – எங்களுக்கு நீங்கள் உதவவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். இதனை அரசாங்கம் திட்டமிட்டே மேற்கொண்டிருக்கின்றது. இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல, பொதுஜன பெரமுனவுடனும், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் இருக்கின்றனர் என்பதை காண்பிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்திருக்கின்றது. இதனைப் புரிந்து கொண்டதன் காரணமாகவே, ஜெய்சங்கர் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார்.

இதன்மூலம், முடிந்தவரையில் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் மத்தியில் ஒத்தகருத்திருக்க வேண்டியது அவசியம். அவ்வாறில்லாத போது, விடயங்களை கையாள்வதில் நெருக்கடிகள் ஏற்படலாம் என்பதையே ஜெயசங்கர் மறைமுகமாக சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதாவது, இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க வேண்மென்றாலும் கூட, அதிலும் உங்களுக்கிடையில் ஒற்றுமையை காணவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் இது மாகாண சபையை எதிர்ப்பவர்களுக்கே சாதகமாகிவிடும் – என்பதைத்தான் அவர் வலியுறுத்த முற்பட்டிருக்கின்றார்.

ஜெய்சங்கரின் மூன்று நாள் விஜயத்தின் போது, அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள், 13ஆவது திருத்தச்சட்டத்தின் மீது இந்தியா கொண்டிருக்கும் கரிசனையை தெளிவாக காண்பித்திருக்கின்றது. இதற்கு காரணம் – 13இற்கு அப்பால் செல்லக்கூடிய நிலைமை, தற்போதைய சூழலில் இல்லை. எனவே, முதலில் இருப்பதை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இருப்பதையும் தவறவிடுவீர்களானால், பின்னர் பற்றிப்பிடிப்பதற்கு எதுவும் இருக்காது, என்பதே, ஜெய்சங்கர் கூட்டமைப்பிற்கு கூறியிருக்கும் அறிவுரை.

# சஜித் அணியை கிலிகொள்ள வைக்கும் சம்பிக்கவின் '43'!

**" 1943 ஆம் ஆண்டில்தான் இலங்கையில் இலவசக்கல்விக்கான சட்டமூலம் இயற்றப்பட்டது. தரம் ஒன்று முதல் பல்கலைக்கழக கல்விவரை இலவசக்கல்வி வழங்கப்பட்டது. இதுவே இலங்கையில் சமூக வளர்ச்சிக்கு வித்திட்டது. எனவேதான் '43' என்ற பெயர் சூட்டப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. "**

ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தி யுடன் சங்கமிக்கும் முடிவை எடுத்துள்ள சம்பிக்க ரணவக்க, 43 ஆம் படையணி எனும் பெயரில் புதியதோர் அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பும் பணியில் இறங்கியுள்ளமையானது, சஜித் அணியி னரை கிலிகொள்ள வைத்துள்ளது என கொழும்பு அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.



2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க ரணவக்க, மேற்படி அரசியல் வியூகத்தை வகுத்துள்ளார் எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமையை பெறுவதற்கு தயாரான சம்பிக்க ரணவக்க, எதற்கு இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்ற வினாவுக்கு சஜித் அணியினரிடமும் தெளிவான பதில் இல்லை. அரசாங்கத்துக்குஎதிராக பல அணிகள் செயற்படுவது சிறப்பு என சஜித் அணியினர் கூறினாலும், அவர்கள் மத்தியில் ஒரு குழப்பநிலை இருப்பதை ஊகிக்கமுடிகின்றது.

இதன்காரணமாகவே 2024 இல் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலின்போது தமது அணி வேட்பாளர் யார் என்பதனை தற்போதே வெளிப்படையாக அறிவிக்க ஆரம்பித் துள்ளனர். அதுமட்டுமல்ல, தமது கட்சி உறுப்பினர் அல்லாதவர்களுக்கு பொது வேட்பாளராக களமிறங்கும் வாய்ப்பு வழங்கப்படாது என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளது.

சஜித்தின் பெயரை இவ்வாறு முன்னிலைப் படுத்தி, சம்பிக்க களமிறங்கமாட்டார் என்ற தகவலை சமூகமயப்படுத்துவதே மேற்படி அறிவிப்புகளின் கருப்பொரு ளாகும். எனினும், அரசியல் களத்தில் இறுதிநொடியில்கூட மாற்றங்கள் நிகழக்கூடும். இதன்காரணமாகவே சம்பிக்கவின் புதிய இயக்கம்மீது சஜித் அணி கண் வைத்துள்ளது.

'43 ஆம் பிரிவு' எனும் அரசியல் இயக்கமானது, இது இலக்கமல்ல; தலைமுறை, என்ற மகுடத்தின் கீழ் அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின்பிறகு செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த அரசியல்வாதிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளை இந்த இயக்கத்துக்கு இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கையும்முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

1943 ஆம் ஆண்டில்தான் இலங்கையில் இலவசக்கல்விக்கான சட்டமூலம் இயற்றப்பட்டது. தரம் ஒன்று முதல் பல்கலைக்கழக கல்விவரை இலவசக்கல்வி வழங்கப்பட்டது. இதுவே இலங்கையில் சமூக வளர்ச்சிக்கு வித்திட்டது. எனவேதான் '43' என்ற பெயர் சூட்டப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. ●

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# அரசியல் கைதிகள் என்று எவரும் சிறைகளில் இல்லை

## உறுதிபடக் கூறுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஜன. 08

**அரசியல் கைதிகள் என எவருமே சிறைகளில் இல்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல வினாக்களுக்கான விடை நேரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர் சுரேன் ராகவன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

அரசியல் கைதிகள் என எவருமே சிறைகளில்இல்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் கைதிகள் சிலரே சிறைகளில் உள்ளனர். எனினும் எந்தவித வழக்கும் தொடராது நீண்டகாலமாக இவர்களுக்கு பிணை வழங்காது தடுத்து வைக்கவும்முடியாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்-என்றார்.





# இஞ்சி,மஞ்சள் செய்கை வவுனியாவில் வெற்றி

வவுனியா, ஜன. 08

வவுனியா புளியங்குளம் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட முன்மாதிரி இஞ்சி மற்றும் மஞ்சள் செய்கை வெற்றியளித்துள்ள நிலையில், அது தொடர்பான வயல் விழா நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த பார்வையை இழந்த தவராசா என்ற விவசாயி கடந்த வருடம் மஞ்சள் மற்றும் இஞ்சி செய்கையில் ஈடுபட்டிருந்தார். தற்போது அது செய்கை பண்ணப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையில் அறுவடை நிலைக்கு தயாராகி வருகின்றது.

அது தொடர்பான வயல் விழா நிகழ்வு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அருந்ததி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை அதிதியாக மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் தர்மேந்திரா, பிரதேச சபைத் தவிசாளர் ச.தணிகாசலம், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.




# மன்னாரில் 179 பேர் சுயதனிமைப்படுத்தல்

மன்னார், ஜன. 08

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அந்தக் கிராமத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லிடி மேல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையின்போது மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து செயற்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து சுகாதார அதிகாரிகளும் எருக்கலம்பிட்டி கிராமத்துக்கு விஜயம் செய்து அந்தக்கிராமத்தை சுய தனிமைப்படுத்தி மாலை 4.30 மணி வரை 200 பீ.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் இரண்டு தினங்களில் கிடைக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. அதனை தொடர்ந்தே மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

மேலும் எருக்கலம்பிட்டி கிராமத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பி.ச்.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன-என்றார்.

# 119 அவசர தொலைபேசி எண்ணுக்கு போலித் தகவல் வழங்கியவர் கைது

கொழும்பு, ஜன. 08

பொலிஸ் அவசர இலக்கமான 119 ஐ அழைத்துத் தவறான தகவல் வழங்கிய ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி தனது தொலைபேசியிலிருந்து பொலிஸ் அவசர அழைப்பை ஏற்படுத்தி, கண்டியில் ஒரு சம்பவம் நடப்பதாக போலியான தகவல் வழங்கியுள்ளார்.

தெஹிவளை, கல்தெர கார்டனில் வசிக்கும் 40 வயதானவரே இது தொடர்பில் கைதாகினார்.

அவர் ஈரான், அமெரிக்காவில் தொழில் மற்றும் கற்கையில் ஈடுபட்டுள்ளார். அவரது சகோதரர்கள் மத்திய கிழக்கில் தற்போது தொழில் புரிந்து வருகிறார்கள்.

கைது செய்யப்பட்டபோது, அவர் மருத்துவ சிகிச்சை பெறுபவர் என்பதற்கான சில ஆவணங்களை தாயார் சமர்ப்பித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்காவில் பதற்றம்; இலங்கைத் தூதரகம் பூட்டு

கொழும்பு, ஜன 08

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலைகள் காரணமாக ஜனவரி 10ஆம் திகதி வரை வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் மூடப்பட்டுள்ளது.

அதனால் அவசர தேவைகளுக்காக பின்வரும் முறையினூடாக தொடர்புகொள்ளுமாறு தூதரகம் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவசர சேவைகளுக்கு: slembassy@slembassyusa.org

தூதரக விடயங்கள் : consularofficer@slembassyusa.org (மின்னஞ்சல்)

தூதரக தொலைபேசி எண் : (202) 580 9546

அமெரிக்க பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு, டொனால்ட் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, கட்டடத்தினுள் நுழைந்தவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பாராளுமன்றத்தை முற்றுகையிட்டபோது நடந்த துப்பாக்கிச்சூட்டில் பெண் உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுநாயக்கா விமான நிலைய பதில் மேலாளருக்கும் தொற்று

கொழும்பு, ஜன. 08

கட்டுநாயக்கா, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பதில் மேலாளரும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த 15 இற்கும் மேற்பட்ட விமான நிலைய ஊழியர்கள் தங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அண்மையில் மத்தள விமான நிலையத்தில் நடைபெற்ற உக்ரேனிய பிரஜைகளுக்கான வரவேற்பு நிகழ்வில் கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகள் கலந்துகொண்டனர் என விமான நிலைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.



# வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரி கொரோனா அவசர நிலைக்குத் தயார்

## மாவட்ட ஒருங்கிணைப்பு இராணுவ அதிகாரி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.8

**யாழ்.வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரியை கொரோனா வைரஸ் தொற்று அவசர நிலைக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்டத்தில் அவசர நிலை ஏற்படும்போது வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரியை கொரோனா அவசர நிலைக்குப் பயன்படுத்த இந்தக் கல்லூரி நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என யாழ். மாவட்ட கொரோனா ஒருங்கிணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொரோனா தடுப்பு நடவடிக்கை தொடர்பில் ஆராயும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் தொடர்ந்து தற்போதுள்ள நிலைமையைப் பேணமுடியும்.

கொரோனா கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதாரப் பிரிவினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ)

# கொழும்பில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்

கொழும்பு, ஜன. 08

நாட்டில் நேற்றுக் காலை வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்ட 522 கொரோனா நோயாளர்களுள், அதிகமானவர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி 206 பேர்கொழும்பு மாவட்டத்தில் பதிவானதாக கொவிட்-19 கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் கம்பஹா மாவட்டத்தில் 97 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 81 பேரும் காலி மாவட்டத்தில் 28 பேரும் குருநாகல் மாவட்டத்தில் 27 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 24 பேரும் பதிவாகியுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில்13 பேரும் இரத்தினபுரி மாவட்டத்தில் 12 பேரும் கண்டி மாவட்டத்தில் 7 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 5 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 பேரும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# 4 பிரிவுகளாக பயணிகளை நாட்டுக்கு அழைக்க ஏற்பாடு

கொழும்பு, ஜன. 08

இலங்கையில் விமான நிலையங்கள் திறக்கப்பட்ட பின்னர் 4 பிரிவுகளாக பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்கள் மீளத் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே 4 பிரிவுகளாக பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள், இலங்கை மாணவர்கள், இலங்கை தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரியஆரச்சி தெரிவித்தார்.



# அக்குரணையில் வெள்ளம்

கொழும்பு, ஜன. 08

நாட்டில் நீடிக்கும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டி - அக்குரணை பகுதியில் தொடர்ந்தும் வெள்ள நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக கண்டியிலிருந்து மாத்தளை வரை பயணிப்போர் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

மாற்று வீதியாக வத்தேகம ஊடாக மாத்தளைக்கு பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீரேந்து பிரதேசத்தில் பெய்து வரும் மழை காரணமாக 06 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இருநாட்டு மீனவர்கள் பிரச்னை; ஜெய்சங்கருடன் டக்ளஸ் பேச்சு!

கொழும்பு, ஜன. 08

இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பிலான பிரச்னைகளை சுமூகமாக தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் இந்தியாவின் அக்கறை வெளிப்படுத்தப்பட்டிருந்தது எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இந்திய வெளிவிகார அமைச்சருக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே இந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இந்திய -இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்னைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்ட குறித்த கலந்துரையாடலின்போது வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் தேசிய நல்லிணக்கத்தின் ஊடான உறவுப் பாலத்தை வலுப்படுத்துவதையும், இந்தியாவுடன் விசேடமாக தமிழ் நாட்டுடன் நல்லுறவை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர்கடற்றெரிழில்அமைச்சை தனக்கு வழங்கி இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சருக்கு எடுத்துரைத்தாக என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலங்களில் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய கடற்றொழிலாளர்களையும், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களையும் விடுதலை செய்து சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைப்பற்காக நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அதேபோன்று 2018 ஆம் ஆண்டு புதிய மீன்பிடி தொடர்பான சட்டம் இலங்கையில் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் கைப்பற்றப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளில் பழுதடைந்த நிலையில் கைவிடப்பட்டுள்ளவற்றை விற்பனை செய்து, இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவது தொடர்பாகவும்கருத்துக்கள்பரிமாறப்பட்டன.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை கேட்டுக்கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர், குறித்த விடயம் தொடர்பாக தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு சுமூகமான தீர்வை காண்பதற்கு உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.



# வியாழேந்திரனையும் சந்தித்த ஜெய்சங்கர்

கொழும்பு, ஜன. 08

கிழக்கு மக்களின் பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனிடம் உறுதியளித்துள்ளார் என்று இராஜாங்க அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் நேற்று முன்தினம் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை கொழும்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் சந்தித்து கலந்துரையாடிய போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுமார் இருபது நிமிடங்களுக்கு மேலாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் பொதுவாக எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் தேவைகள் குறித்தும், கிழக்கு மாகாண மக்களுக்கு இருக்கின்ற விசேடமான பல்வேறுபட்ட அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகள், அதிலும் குறிப்பாக வீட்டுத்திட்டம், குடிதண்ணீர்ப் பிரச்னை மற்றும் மலசல கூடங்கள் உட்பட வாழ்வாதார கட்டமைப்புக்களை ஏற்படுத்துதல், போன்றவை தொடர்பாக வியாழேந்திரனால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெளிவுபடுத்தப்பட்டது. இத்த கோரிக்கைகளை செவிமடுத்த இந்திய வெளிவிவகார அமைச்சர், கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் நாட்களில் தமிழ் மக்களுக்கான பல்வேறுபட்ட திட்டங்களை முன்னெடுப்பதில் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவாக்குறுதியளித்துள்ளதாகஇராஜாங்க அமைச்சரின் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

# இந்திய வீட்டுத்திட்டம் விரைவில் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும்

## தமிழ் முற்போக்கு கூட்டணி ஜெய்சங்கரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன.08

**“மலையகத்தில் கடந்த ஒரு வருடமாக எந்தவொரு அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கின்றது. எனவே, இந்திய தோட்டத்துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.”-என்று தமிழ் முற்போக்கு கூட்டணி இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**



இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக்குழு நேற்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து, பேச்சு நடத்தியது.

கூட்டணியின்தலைவர்மனோ கணேசன் தலைமையிலான குழுவில் பிரதித் தலைவர் ராதாகிருஷ்ணன், பொதுச் செயலாளர் சந்திரா சாப்டர் ஆகியோர் இடம் பெற்றனர்.

இதன்போது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்கள் மற்றும் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கடந்த ஒரு வருடமாக மலையகத்தில் எந்தவொரு அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கிறது, ஆகவே இந்திய தோட்டத்துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப்படவேண்டும், ராமேஸ்வரம்-மன்னார், தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவையை ஆரம்பிக்க உங்கள் தரப்பில் ஆவன செய்யுங்கள், நோர்வூட் கிளங்கன், நுவரெலியா மருத்துவமனைகளுக்கு பி.சி.ஆர் இயந்திரங்கள் இரண்டு வேண்டும், இந்தியா, இலங்கையின் உண்மை நண்பன் என்பதை சிங்கள மக்களுக்கு விளக்கிக்கூறி எடுத்து காட்டவேண்டும் ஆகிய கோரிக்கைகள் தமிழ் முற்போக்கு கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், 13ஆம் திருத்தம், மாகாணசபைகள் தொடர்பான இந்திய நிலைப்பாடு வரவேற்கத்தக்கது, புதிய அரசமைப்பு வரைவு குழுவுக்கு, தமிழ் முற்போக்குக் கூட்டணி யோசனைகளை முன்வைத்துள்ளது. எதிரணியில் இருந்தாலும் நாமே, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பெரிய அரசியல் இயக்கம். இன்றைய இலங்கை அரசு செல்வாக்கு இழந்து வருகிறது. வெகு விரைவில் இனவாதம் இல்லாத இலங்கையை எமது தேசிய கூட்டணி உருவாக்கும் ஆகிய கருத்துகளும் தமிழ் முற்போக்கு கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் எடுத்து கூறப்பட்டன.

மேலும், இன்றைய நரேந்திர மோடி அரசே, இலங்கையில் வாழும் எமது மக்கள் மீது அதிக அக்கறை காட்டுகிறது. அதன் பிரதிபலிப்பாகவே, இந்தியாவுக்கு வெளியே மிகப்பெரும் மக்கள் கூட்டத்தை நாம் பிரதமர் மோடிக்காக நோர்வூட்டில் கூட்டினோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் இந்திய வெளிவிகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூறி, பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் தூதரக அதிகாரிகள், சந்திப்பின் போது கலந்துக்கொண்டனர்.

# 35 மில்லியன் ரூபா செலவில் ஆயுர்வேத வைத்தியசாலை

## கிளிநொச்சியில் அமைக்க ஏற்பாடு

கிளிநொச்சி, ஜன. 08

கிளிநொச்சியில் விடுதி வசதிகளுடன் கூடிய விசேட கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த ஆயுர் வேத வைத்தியசாலை கிளிநொச்சி நகரில் கூட்டுறவு மண்டபத்திற்கு அருகில் ஏ-9 வீதியோடு மாவட்ட பயிற்சி வள நிலையம் அமைந்துள்ள வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான காணியை மேற்படி இடத்தில் மாவட்டச் செயலகம் அண்மையில் ஒதுக்கியிருந்தது. எனவே, அடுத்த கட்டப் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது பரந்தன் பிரதேசத்தில் பரந்தன்-பூநகரி வீதியில் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலை இயங்கி வருகிறது.

# தற்போதைய பி.சி.ஆர். பரிசோதனை வடக்கு மாகாணத்துக்கு போதுமானது

## வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 08



தற்போதைய நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை வடக்கு மாகாணத்துக்கு போதுமானது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட கொரோனா தடுப்பு விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமையில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரு நாளைக்கு 600க்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. எனவே, தற்போதைய நிலையில் எமக்கு அன்ரிஜென் பரிசோதனை தேவையற்ற ஒன்று.

ஏனைய மாகாணங்களில் குறித்த அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. ஏனெனில் அந்த மாகாணங்களில் எமது மாகாணத்தைப்போல பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன் அன்ரிஜென் பரிசோதனையில் ஒரு சில நம்பிக்கையில்லா தன்மையும் காணப்படுகின்றது. அன்ரிஜென் பரிசோதனையில்ஒருவருக்கு தொற்று என காண்பிக்குமாயின் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்யும் போது தொற்று இல்லை என காண்பிக்கும்.

அதேபோல அன்ரிஜென் சோதனையின்போது ஒருவருக்கு தொற்று இல்லை என உறுதிப்படுத்தியவரை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்படும்.

எனவே, அன்ரிஜென் பரிசோதனை என்பது மிகவும் நம்பகரமான சோதனை முறை அல்ல.

மேலும், வடக்கு மாகாணத்தில் போதியளவு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதன் காரணமாக நாம் தற்போது அதைப் பற்றி பரிசீலிக்கத் தேவையில்லை.

அத்தோடு வெளிமாவட்டங்களில் இருந்து ஆனையிறவு மற்றும் பூநகரிப் பாதை ஊடாக வருவோருக்கு நாம் அதிகாலை வேளைகளில் பி.சி.ஆர் சோதனைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர்தொற்றாளர்களுடன் நேரடி தொடர்பில் இருந்தோருக்கு நாம் ஒவ்வொரு நாளும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம்-என்றார்.

# தோட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசு பொறுப்பேற்கும்

கொழும்பு, ஜன. 08

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளை பொறுப்பேற்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், பெருந்தோட்டப் பகுதிகளில் சுகாதார துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும். வைத்தியசாலையொன்றுக்கு இரு வைத்தியர்கள் வீதம் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.



# சுகாதார நடைமுறைகளை செயற்படுத்த அரசியல் அழுத்தமே தடையாக உள்ளது

## காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 08

சுகாதார நடைமுறைகளை செயற்படுத்த அரசியல் அழுத்தங்கள் தடையாகவுள்ளதென காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி குற்றச்சாட்டியுள்ளார்.

சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைச் செயற்படுத்தும்போது சில உயர்மட்ட அரசியல் அழுத்தங்கள் காரணமாக தமக்கு இடர்பாடுகள் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு விசேட செயலணி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

குறிப்பாக காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட ஆலயங்களில் சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய 50 பேர் மட்டுமே ஆலய உற்சவங்களில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அதனை நாம் செயற்படுத்துகின்றோம். அவ்வாறு செயற்படுத்தும்போது ஒரு சில நபர்கள் தமது உயர்மட்ட அரசியல் அழுத்தங்களை பாவிக்கின்றனர். அதனால் எமக்கு இடையூறு ஏற்படுகின்றது. இது தொடர்பில் ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு, தொடர்ச்சியாக அநாமதேய தொலைபேசிகள் ஊடாக மிரட்டல் விடுக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்-என்றார்.

# பாடசாலை செல்லும் மாணவர்கள் பொது போக்குவரத்தை தவிருங்கள்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலர் கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஜன.08

**பாடசாலை செல்லும் மாணவர்கள் பொதுப்போக்குவரத்தைத் தவிருங்கள் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு மாகாணத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நிலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பொதுப்போக்குவரத்துக்களைத் தவிர்த்து தமது பெற்றோரின் சொந்த வாகனங்களில் பாடசாலைக்குச் செல்வது சிறந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில்இடம்பெற்ற கொரோனா தடுப்பு விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்க பாடசாலையின் வகுப்பறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு சுகாதார அமைச்சினால் பாடசாலை மாணவர்களின் சுகாதார நலத்திட்டங்களை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நிதியீட்டங்களின் மூலம் மாணவர்களின் சுகாதார நடைமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு பாடசாலை வகுப்பறைகளில் இரண்டு கட்டங்களாக மாணவர்கள் உள்வாங்கப்பட உள்ளார்கள்.

அதாவது, ஒரு தொகுதியினர் கிழமையில் மூன்று நாட்களும் மற்றொரு தொகுதியினர் அடுத்த மூன்று நாட்களும் பாடசாலைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

அத்தோடு பாடசாலையின் அகச்சூழலை பொறுத்தவரை சுகாதார நடைமுறைகளை பேணுவதற்கு ஏற்றவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புறச்சூழலைப் பொறுத்தவரை அருகில் உள்ள கடைகள் மற்றும் போக்குவரத்து போன்ற இதர செயற்பாடுகளில் சில இடர்பாடுகள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள்பொதுப்போக்குவரத்துகளை தவிர்த்து பெற்றோர்களின் சொந்த வாகனங்களில் வருவதன் மூலம் கொரோனா தொற்று ஏற்படுவதில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட உள்ளதால் பாடசாலைகளைச் சுத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன். இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியுடனும் அந்தந்த பிரிவு படைப் பிரிவினர் உதவியையும் கோரியுள்ளேன்.

எனவே, அவர்களின் உதவி மூலம் பாடசாலைகள் சுத்தம் செய்யப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட்டு மாணவர்கள் பாடசாலைக்கு வழமைபோல் அழைக்கப்படுவார்கள்-என்றார். (அ-03)



## பொலிஸ் பரிசோதகர் கைது

கொழும்பு, ஜன. 08

தொம்பே பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

போதைப் பொருள் வர்த்தகத்துக்கு உதவிய குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## 231 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 08

கொரோனா தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள 231 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தனர்.

அதன்படி, கட்டாரிலிருந்து 30 பேர், சைப்பிரஸிலிருந்து 201 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்றுக் காலை வந்தடைந்தனர் என கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

## வெடிக்காத குண்டு மீட்பு

வவுனியா, ஜன. 08

வவுனியா கனகராயன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதிரங்குளம் குளப் பகுதியிலிருந்து ஆர்.பி.ஜி செல் மற்றும் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள குளத்துக்கு அருகாமையில் வெடிபொருள்கள் இருப்பது குறித்து இராணுவத்துக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அந்தப் பகுதியைச் சோதனையிட்ட நிலையில் ஆர்.பீ.ஜி. செல் ஒன்றையும், கைக்குண்டு ஒன்றையும் மீட்டனர்.

நீதிமன்றின் அனுமதியுடன் அந்த வெடிபொருட்கள் நேற்று செயலிழக்கச் செய்யப்பட்டன.

## யாழில் சந்தைகள் திறப்பு இப்போது சாத்தியமில்லை

யாழ்ப்பாணம்,ஜன.08

கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் யாழ். மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள சந்தைகளை தற்போதைய நிலையில் மீளத் திறப்பது சாத்தியமற்றது.

இவ்வாறு யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்று இடம்பெற்ற கொரோனா கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், பிறந்தநாள்கொண்டாட்டங்களை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளபோதும் 50 பேருக்குட்பட்ட கூட்டங்கள் ஏனைய செயல்பாடுகளை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளலாம் எனவும், ஆலயங்கள் மற்றும் பொது இடங்களிலும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு செயல்பாடுகளை முன்னெடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருடம் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தை சுகாதார அமைச்சின் அனுமதியுடன் நடத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் விரைவில் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## புதுக்குடியிருப்பில் ஐஸ் போதைப்பொருள் மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 08

புதுக்குடியிருப்புப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் ரகப் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் அதிரடிப்படையினர் நேற்று முன் தினம் இரவு மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போதே போதைப் பொருள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

197 கிராம் 340 மில்லிகிராம் ஐஸ் ரக போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டதாகவும் இவற்றின் பெறுமதி சுமார் 20 இலட்சம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இரத்தினபுரி வைத்தியசாலை மூன்று விடுதிகளுக்குப் பூட்டு

கொழும்பு, ஜன. 08

இரத்தினபுரி பொது வைத்தியசாலையின் 3 விடுதிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் அனோஜ் ரொட்ரிக்கோ தெரிவித்தார்.

தமது வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களுக்கு எழுமாற்றாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

## இலங்கை இராணுவத்தில் விவசாய, கால்நடை பிரிவு



கொழும்பு, ஜன. 08

இலங்கை இராணுவம் விவசாய மற்றும் கால்நடைப் படை பிரிவைப் புதிதாக நிறுவியது.

நேற்றுக் காலை இராணுவ தலைமையகத்தில் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

நாட்டில் எந்தவொரு விவசாயப் பொருள் பற்றாக்குறையும் இல்லாமல், நாட்டிற்குள் பயிர்களை உற்பத்தி செய்வதே இதன் நோக்கம் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார்.





© REUTERS

# அமெரிக்க பாராளுமன்றத்தில் ட்ரம்ப் ஆதரவ கும்பல் கலவ

## நான்கு பேர் உயிரி வாஷிங்டனில் ஊர

**கலவரத்தை தொடர்ந்து தனது ஆதரவாளர்களைத் திரும்பிப் போகும்படி ட்ரம்ப் வேண்டுகோள் விடுக்கும் வீடியோவை பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் அகற்றியுள்ளன. அந்த வீடியோவில் ஆதரவாளர்களை திரும்பிப் போகச் சொல்லும் அதே நேரம், அவர் தேர்தலில் முறைகேடு நடந்து விட்டதாக ஆதார மில்லாமல் மீண்டும் குற்றம்சாட்டினார். டுவிட்டர், டிரம்பின் கணக்கை 12 மணி நேரத்துக்கு முடக்கி வைத்துள்ளது.**

அமெரிக்க பாராளுமன்றம் கூடும் கேப்பிடல் கட்டடத்துக்கு வெளியேயும், உள்ளேயும் குவிந்த ட்ரம்ப் ஆதரவாளர் கள் கலவரத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் நடந்துகொண்டிருந்த நிலையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது. இதில் இதுவரை நான்கு பேர் இறந்துள்ளனர்.

நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் தாம் தோல்வி அடைந்து, ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் வெற்றி பெற்றதை ஏற்றுக்கொள்ள மறுத்துவரும் அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்த வெற்றியை ஏற்றுச் சான்றிதழ் வழங்காமல் தேர்தல் முடிவுகளை நிராகரிக்கும்படி துணை அதிபர் மைக் பென்சை வலியுறுத்தி வருகிறார்.

இந் நிலையில், அதிபர் தேர்தல் முடிவுகளை உறுதி செய்வதற்காக பாராளுமன்றக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. அப்போது ட்ரம்ப் ஆதரவு கலவரக் கும்பல் பாராளுமன்றத்தில் புகுந்தது.

கேப்பிடல் கட்டடம் மீண்டும் பாது காப்புப் படையின் கட்டுப்பாட்டுக்குள் வந்து, நிறுத்தப்பட்ட பாராளுமன்றக் கூட்டம் மீண்டும் தொடங்கியது.

**கப்பிடல் கட்டடத்தில் என்ன நடந்தது?**

சில கலவரக்காரர்கள் பக்கச் சுவரைப் பிடித்து ஏறிச் சென்று பாராளுமன்ற செனட் அவைக்குள் நுழைந்தனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்குதலில் இருந்து தப்பிக்க ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அவைத் தலைவர் நான்சி பெலோசி அலுவலகத்திலும் கலவரக்காரர் ஒருவர் புகுந்ததைக் காட்டும் படம் வெளியாகி யுள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் முதலில் தேர்தல் சபை உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பிறகு அவர்கள் அதிபரை தேர்வுசெய்ய வாக்களிப்பார்கள்.



நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் இப்படி தேர்தல் சபை உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை டிசெம்பர் 14ஆம் திகதி செலுத்தி அவற்றை சீலிட்ட கவர்களில் அனுப்பிவைத்தனர். அந்த வாக்கு கள் புராதன மகோகனி மரப் பெட்டிகளில் வைத்து கப்பிடல் கட்டடத்துக்கு புதன்கிழமை கொண்டு செல்லப்பட்டன.

அந்த வாக்குகளை அமெரிக்க பாராளுமன்றத்தில் எண்ணும் பணி நடந்து கொண்டிருந்த நிலையில் இந்தக் கலவரம் நடந்துள்ளது. வாக்குகளை எண்ணி முடித்து, பைடனின் வெற்றியை அங்கீகரித்து பாராளுமன்றம் சான்றிதழ் அளிக்கவேண்டும்.

இதையடுத்து வாக்குகளை எண்ணும் பணி நிறுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர்.

எனினும் இந்த வாக்குச் சீட்டுகள் காப்பாற்றப்பட்டதாக ஒரு செனட் உறுப்பினர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

வழக்கமாக இந்த வாக்குச் சீட்டுகள் எண்ணி முடிக்கப்பட்ட பிறகு ஓராண்டு காலத்துக்கு பொது மக்கள் விரும்பினால் சரி பார்ப்பதற்காக பெடரல் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

**ஊடகங்கள் மீது தாக்குதல்**

இந்தக் கலவரத்தில் ஊடகங்கள் தாக்கப்பட்டன. இதையடுத்து வாஷிங்டன் டிசியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கலவரத்தை தொடர்ந்து தனது ஆதரவாளர்களைத் திரும்பிப் போகும்படி ட்ரம்ப் வேண்டுகோள் விடுக்கும் வீடியோவை பேஸ்புக் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் அகற்றியுள்ளன. அந்த வீடியோ வில் ஆதரவாளர்களை திரும்பிப் போகச் சொல்லும் அதே நேரம், அவர் தேர்தலில் முறைகேடு நடந்துவிட்டதாக ஆதார மில்லாமல் மீண்டும் குற்றம்சாட்டினார்.

டுவிட்டர், டிரம்பின் கணக்கை 12 மணி நேரத்துக்கு முடக்கி வைத்துள்ளது.

முன்னாள் அதிபரும் ட்ரம்பின் குடியரசுக் கட்சியை சேர்ந்தவருமான ஜோர்ஜ் புஷ் இந்த தாக்குதலை கடுமையாக கண்டித்துள்ளார்.

**4 பேர் மரணம்; 52 பேர் கைது**

**5 ஆயுதங்கள் சிக்கின**

கலவரத்தில் பொலிஸார் சுட்டதில் ஒரு பெண் இறந்தார். இது தவிர, மருத்துவ அவசர நிலை காரணமாக மூன்று பேர் இறந்துள்ளனர் என்கிறது வாஷிங் டன் டிசி பொலிஸ்.



இதுவரை 52 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர். அவர்களில் 47 பேர் ஊரடங்கு உத்தரவை மீறியதற்காக கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கலவரம் தொடர்பாக 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.



**வாக்குகளை எண்ணும் பணி இரவு மீண்டும் தொடரும்**

புதன்கிழமை இரவே மீண்டும் தேர்தல் சபை வாக்குகளை எண்ணும் பணி பாராளுமன்றத்தில் தொடரும் என்று பாராளுமன்ற பிரதிநிதிகள் அவைத் தலைவர் நான்சி பெலோசி தெரிவித்தார்.

தலைநகரில் 2,700 பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். இதை யடுத்து கலவரக்காரர்கள் கலைந்து சென்றனர்.

ட்ரம்பின் சொந்தக் கட்சியைச் சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் இந்த கலவரத்தை எதிர்த்தும், பைடனின் வெற்றியை ஆதரித்தும் பேசத் தொடங்கியுள்ளனர்.

**ட்ரம்ப் பதவியை பறிக்க வாய்ப்பு?**

தொடர்ந்து வன்முறையைத் தூண்டும் வகையில் ட்ரம்ப் பேசி வந்ததால்தான் கலவரம் வெடித்ததாக பலரும் குற்றம்சாட்டி வருகிறார்கள்.

இந்நிலையில் அவரை பதவியில் இருந்து நீக்க அரசமைப்புச் சட்டத்தில் வழி இருப்பதாகவும், அதை பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழத் தொடங்கிவிட்டன.

அந்த சட்டப் பிரிவு 25ஆவது திருத்தம் என்று அழைக்கப்படுகிறது.

ட்ரம்பின் அமைச்சரவைக்குள்ளேயே இந்த சட்டத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு குறித்து முணுமுணுப்புகள் தொடங்கியுள்ளன என்று பிபிசியின் கூட்டாளியான சிபிஎஸ் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட அந்த 25ஆவது திருத்தத்தின் படி, அதிபருக்கு அவரது



வு
வரம்!
ழிப்பு
டங்கு

கடமையை ஆற்ற முடியாத நிலை ஏற்பட்டால் அவரது பொறுப்புகள் வேறொருவருக்கு மாற்றப்படலாம்.

தற்போதைய நிலையில், முக்கிய அமைச்சரவை உறுப்பினர்கள், துணை அதிபர் மைக் பென்ஸ், ஆகியோர், “ட்ரம்ப் தகுதியோடு இல்லை என்பதால் மைக் பென்ஸ் செயல் தலைவர் ஆகிறார்” என்று பாராளுமன்றத் தலைவர்களுக்கு கடிதம் எழுதிதான் இதைச் செய்ய வேண்டும்.

1967ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்டதில் இருந்து இந்த சட்டத் திருத் தம் ஒரு முறைகூட பயன்படுத் தப்பட்ட தில்லை. ஆனால், இதுவரை இதற்கான கோரிக்கை துணை அதிபர் மைக் பென்சிடம் முறைப்படியாக சமர்ப்பிக்கப்படவில்லை.

வெர்மான்ட் மாகாண குடியரசுக் கட்சி ஆளுநர், தேசிய உற்பத்தியா ளர்கள் சங்கத் தலைவர் உள்ளிட் டோர் மைக் பென்சை சந்தித்து இந்தப் பிரிவை பயன்படுத்தும்படி கோரியுள்ளனர்.

**உலகத் தலைவர்கள் கண்டனம்**

அண்டை நாடான கனடாவின் பிரத மர் ஜஸ்டின் ட்ரூடே, பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உள்ளிட்ட பல உலக நாடுகளின் தலைவர்கள் இதனை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்று கூறி கண்டித்துள்ளனர்.

வாஷிங்டன் டிசியில் நடக்கும் கலவரம், வன்முறை குறித்த செய்திக ளைப் பார்ப்பது வேதனை தருகிறது என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

இது பற்றி டுவிட்டரில் கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, “அமைதியாகவும், ஒழுங்கான முறையிலும் ஆட்சி மாற்றம் நடைபெறுவது தொடரவேண்டும். சட்டவிரோதப் போராட்டங்கள் மூலமாக ஜனநாயக நடைமுறை சிதைக்கப்படுவதை அனுமதிக்க முடியாது” என்று குறிப்பிட் டுள்ளார்.

**குடியரசுக் கட்சியிலேயே பெருகும் எதிர்ப்பு**

முறைப்படி நடந்து முடிந்த தேர்த லின் முடிவுகளை ஆதாரமற்ற குற்றச் சாட் டுகளை வைத்து ட்ரம்ப் விமர் சனம் செய்து வருவதற்கும், அவரது ஆதரவாளர்கள் பாராளுமன்றக் கட்டடத்தில் செய்துள்ள கலவரத்துக் கும் ட்ரம்பின் சொந்தக் கட்சியான குடியரசுக் கட்சி யிலேயே எதிர்ப்பு பெருகி வருகிறது.

குறிப்பாக, குடியரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பி னர்கள் நடந்த சம்பவத்துக்கு தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்து வருகின்றனர்.

“இன்று நடந்தது அருவருப்பானது” என்று நெப்ராஸ்கா மாநிலத்தை சேர்ந்த பென் சஸ்ஸே என்ற செனட் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

ஜோர்ஜியா மாநிலத்தில் செனட் சபைக்கு நடந்த தேர்தலின் வாக்கு எண்ணிக்கையில் தோல்வியடைந்த செனட்டர் கெல்லி லெப்லர்கூட இதனைக் கண்டித்துள்ளார்.

பைடன் வெற்றிக்கு சான்றிதழ் அளிப்பதற்கான தமது ஆட்சேபனையையும் அவர் மாற்றிக் கொண்டுள்ளார்.

நல்ல மனசாட்சியோடு இந்த தேர்தல் முடிவுகளுக்கு சான்றிதழ் அளிப்பதற்கு இப்போது என்னால்



ஆட்சேபனை செய்ய முடியாது என்று அவர் தெரிவித் துள்ளார்.

மீண்டும் தொடங்கிய பாராளுமன்றக் கூட்டத்தில் பேசிய துணை அதிபர் மைக் பென்ஸ், “அமெரிக்க கப்பிடல் வரலாற்றில் இது ஒரு கறுப்பு நாள்” என்று தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் ஆதரவு கும்பல் நடத்திய வன்முறைக்கு முன்னாள் அதிபரும் குடி யரசு கட்சியைச் சேர்ந்தவரு மான ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உள்ளிட்ட அக்கட்சியின் பல தலைவர்கள் கடும் கண்டனத்தையும் அதிருப்தியையும் பதிவு செய்து வருகின்றனர்.

**கலவரத்தை எதிர்க்கும் ஜோர்ஜ் புஷ்**

ஜோர்ஜ் டபிள்யூ புஷ் புதன்கிழமை அரிதாக வெளியிட்ட ஓர் அறிக்கையில், “தேர்தல் முடிவுகள் மிகவும் சர்ச்சைக் குரிய வகையில் எப்படி எதிர்க்கப்படு கிறது? இது நமது ஜனநாயக குடியரசு கிடையாது. தேர்தலுக்குப் பின்னர் சில அரசியல் தலைவர்களின் பொறுப்பற்ற நடத்தை மற்றும் நமது அமைப்புகள், சட்ட அமலாக்கத்துறைகளுக்கு நாம் காட்டும்



அவமரியாதையை பார்த்து நான் மிகவும் திகைக்கிறேன்,” என்று கூறியிருக்கிறார்.

அமெரிக்க அதிபர் பதவிக்காலத்தின் நிறைவுக்குப் பிறகு பொதுவாக வெள்ளை மாளிகை விவகாரங்களில் அதிகம் பேசாதவராகவே ஜோர்ஜ் டபிள்யூ புஷ் காணப்பட்டு வந்த நிலையில், தற்போதைய அவரது இந்த அறிக்கை மிகுந்த முக்கியத்துவதைப் பெறுகிறது.

“கப்பிடல் கட்டடம் மீதான வன்முறைத் தாக்குதல் - மற்றும் அரசியலமைப்பு ரீதியாக அவசியமான பாராளுமன்ற கூட்டத்தை சீர்குலைப்பது என்பது பொய்கள் மற்றும் தவறான நம்பிக்கைகளால் தூண்டப்பட்ட மக்களால் மேற்கொள்ளப்பட்டது” என்று புஷ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முற்றுகை நடவடிக்கை, அமெரிக்காவுக்கும் அதன் மதிப்புக்கும் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில், சட்டத்தின் ஆட்சியை ஆதரிப்பது ஒவ்வொரு தேச பக்தி மிக்க குடிமகனின் அடிப்படை பொறுப்பு. தேர்தல் முடிவுகளில் ஏமாற்ற மடைந்தவர்களுக்கு இதை தெரிவிக்கிறேன். அரசியலில் அரசியலை விட முக்கியமானது நமது நாடு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அமைதி மற்றும் பாதுகாப்பான முறையில் தங்களின் கடமைகளை நிறை வேற்றட்டும் என்று ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியுள்ளார்.

முன்னதாக, அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர் தேர்வில் களம் கண்ட மிட் ரோம்னீ செனட் சபையில் பேசுகையில், “வருத்தப்பட்ட வாக்காளர்களுக்கு நாங்கள் மரியாதை காட்ட சிறந்த வழி உண்மை யைச் சொல்வதே” என்று கூறினார்.

“உண்மை என்னவென்றால், அதிப ராக தேர்ந்தெடுக் கப்பட்ட பைடன் தேர்தலில் வெற்றி பெற்றார். தற்போ தைய அதிபர் ட்ரம்ப் தோற்றிருக்கிறார். அந்த அனுபவத்தை நானும் பெற்றேன்” என்று குறிப்பிட்ட ரோம்னீ, “இது ஒன்றும் வேடிக்கை இல்லை,” என்று கூறினார்.

**ஆதரவு தரும் குடியரசு கட்சி எம்.பி**

இதேவேளை, ட்ரம்பின் தீவிர ஆதரவாளராக கருதப்படும் லிண்ட்சே கிரஹாம் பைடனின் வெற்றியை மீண் டும் ஏற்கும் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

“என்னையும் உங்களுடன் சேர்த்து எண்ணுங்கள். நடந்தது போதும்” என்று தெற்கு கரோலினா செனட்ட ரான கிரஹாம் கூறினார்.

“ஜோ பைடன், கமலா ஹாரிஸ் ஆகியோர் சட்ட பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர், ஜனவரி 20 ஆம் தேதி அமெரிக்காவின் அதிபராகவும் துணைத் தலைவராகவும் அவர்கள் வருவார்கள்” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அமெரிக்காவுக்கு அவமானம்**

இது தொடர்பாக முன்னாள் அதிபர் பராக் ஒபாமா வெளியிட்டுள்ள அறிக்கையில், “இது அமெரிக்காவிற்கு “பெரும் அவமதிப்பு மற்றும் அவமானத்தின் தருணம்,” என்று கூறியுள்ளார்.

“கப்பிடல் கட்டடத் தில் இன்றைய வன் முறையை வரலாறு சரியாக நினைவில் வைத்துக் கொள்ளும். தற்போ தைய அதிபரால் தூண்டப்பட்டுள்ளது இந்த கலவரம். ஒரு சட்டபூர்வ தேர்தல் முடிவை அடிப் படையற்ற வகையில் அவர் பொய் என்று கூறுகிறார். இது நமது தேசத்திற்கு பெரும் அவமானம், மற்றும் அவமானத்தின் தருணம்,” என்று ஒபாமா நீண்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

“இப்போது இரண்டு மாதங்களாக, ஓர் அரசியல் கட்சியும் அதனுடன் இணைந்த ஊடக சூழலும் தங்களைப் பின்பற்றுவோருக்கு உண்மையைச் சொல்ல பெரும்பாலும் விரும்பவில்லை - இது ஒன்றும் பலத்த போட்டியாக இருந்த தேர்தல் இல்லை என்பதையும் புதிய அதிபராக தேர்வாகும் ஜோ பைடன் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்கிறார் என்பதையும் அவர்கள் சொல்வதில்லை,” என்றும் ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.

“கற்பனையாக அவர்கள் புனைந்த கதைகள் யதார்த்தத்துக்கு மாறானவை. இது பல ஆண்டுகளாக



விதைக்கப்பட்ட மனக்கசப்புகளை தூண்டியிருக்கிறது. இப்போது அதன் விளைவுகளை நாம் பார்க்கிறோம். அது ஒரு வன்முறையாக வளர தூண்டப்பட்டிருக் கிறது,” என்று ஒபாமா கூறியுள்ளார்.

இப்போதே, குடியரசுக் கட்சி தலை வர்களுக்கு இரு தேர்வுகள் உள்ளன. ஒன்று அவர்கள் இதே பாணியில் கொழுந்து விட்டெரியும் நெருப்பை அதிகரிக்கச் செய்யலாம் அல்லது யதார்த்தத்தை உணர்ந்து, எரியும் நெருப்பை அணைக்க முயலலாம். அமெரிக்காவை அவர்கள் தேர்வு செய்யலாம்,” - என்று ஒபாமா குறிப் பிட்டுள்ளார். •




© Reuters



# முஸ்லிம் அடிப்படைவாதம் போதிக்கும் மத்ரஸாக்களுக்கு எதிராக நடவடிக்கை

## அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து



கொழும்பு,ஜன.08

**இஸ்லாமிய அடிப்படைவாதம் மத்ரஸா பாடசாலைகளிலேயே போதிக்கப்படுகின்றது. அதனால் அந்தப் பாடசாலைகளை கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரவேண்டும். அத்துடன் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தேவையான எந்த வேலைத்திட்டங்களையும் இதுவரையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றது என எமது மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளை 27-2 இன்கீழ்விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொதுத் தேர்தலில் இந்த அரசாங்கத்துக்கு 67இலட்சம் மக்கள் வாக்களித்தது, மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகும். குறிப்பாக, ஒருநாடு ஒரு சட்டம் என்ற பிரசாரத்தை நாங்கள் முன்னெடுத்து சென்றோம்.

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்கான கலந்துரையாடல்கள் கூட ஆளும்தரப்புக் கூட்டங்களில் இடம்பெறுவதில்லை. இதுதொடர்பில் அரசாங்கத் தரப்பினர் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

விசேடமாக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கை முன்னெடுக்கப்படவேண்டும். தேசிய உற்பத்தியை அதிகரிக்கவேண்டும்.

விவசாய நடவடிக்கைகளுக்காக உள்நாட்டில் உரம் தயாரிக்கப்படவேண்டும். எமக்கு இருக்கும் வளங்களைப் பயன்படுத்திக் கொண்டு தேவையான உரம் தயாரிக்கலாம். அரசாங்கத்துக்கு அதனைச் செய்ய முடியாவிட்டால் அந்தப்பொறுப்பை எமக்கு வழங்கினால் நாங்கள் செய்வோம்.

அத்துடன், ஒருநாடு ஒரு சட்டம் என்ற கொள்கையை நிலைநாட்டுவதாகத் தெரிவித்தாலும் இன்னும் அது ஏற்படுத்தப்படவில்லை. மத்ரஸா பாடசாலைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை போதிப்பது மத்ரஸா பாடசாலைகளாகும். கல்வி அமைச்சுக்கு அப்பாற்பட்டு செயல்படும் இந்த மத்ரஸா பாடசாலைகள் சட்டவிரோதமானவை. அதனால் மத்ரஸா பாடசாலைகளை கல்வி அமைச்சுக்கு கீழ் கொண்டுவரவேண்டும். ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் அறநெறிப் பாடசாலைகளுக்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை- என்றார். (எ)

# மோதிக்கொண்டு பிரிந்திருப்பதா? ஒன்றிணைந்து முன்னேறுவதா?

## சிந்திக்க வேண்டும் என்கிறார் அலி சப்ரி



கொழும்பு,ஜன.07

ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு தொடர்ந்து பிரிந்திருப்பதா, ஒன்றிணைந்து முன்னேறிச் செல்வதா? என்று நாம் சிந்திக்க வேண்டும். பழைய விடயங்களை மறந்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பதற்கான இடமாக பாராளுமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நீதி அமைச்சின் கீழ் உள்ள தண்டனைச்சட்டக்கோவை, பிணை மற்றும் சான்று (திருத்தச்) சட்டமூலங்களை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வேறுபட்ட இனத்தை, மதத்தை சேர்ந்தவராக இருப்பதாலோ வேறுபட்ட மொழியை பேசுவதால் எதிரிகள் ஆகி விடுவதில்லை.

வேற்றுமையில் ஒற்றுமையை காண்பதையே அரசமைப்பும் நமது தேசிய கீதமும் வலியுறுத்துகிறது. இதனடிப்படையிலேயே பேச்சு சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. இறந்தகாலத்தை திரும்பிப்பார்த்தால் அனைவரும் தவறு செய்த இடங்கள் பல இருக்கவே செய்கின்றன.

1958,1978 கலவரங்கள், யாழ். நூலக எரிப்பு, 1983 கலவரம், காத்தான்குடி தாக்குதல், சஹ்ரானின் தாக்குதல் எல்லாம் கரும்புள்ளியாக அமைந்தன.

சமூகத்தை ஓரம்கட்டி இதற்கு தீர்வு காண்பது என்பது தவறான வழியைத் தான் காட்டும். ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு தொடர்ந்து பிரிந்திருப்பதா? ஒன்றிணைந்து முன்னேறிச் செல்வதா? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பதற்கான தலமாக இந்தப் பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எங்களுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் இடமாக இந்தப் பாராளுமன்றம் பயன்படுத்தப்பட்டால் எதிர்காலம் சுமுகமாக அமையாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புள்ள அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும். அதேபோன்று இந்தத் தாக்குதலுடன் தொடர்பு இல்லாத எவருக்கும் தண்டனை வழங்கப்பட கூடாது என்பதிலும் நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

மேலும்,முஸ்லிம்விவாக விவாகரத்து சட்டத்தை திருத்துவதற்கும் திருமண வயதை 18 ஆக மட்டுப்படுத்தவும் தேவையான திருத்தங்கள் செய்யப்படும். புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக சிறந்த நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எல்லா சமூகத்தவர்களும் தவறு செய்துள்ளனர். கடந்த காலத்தவறுகளில் இருந்து பாடம் கற்று, ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். தென்னாபிரிக்காவில் இருந்து நாம் பாடம் கற்க வேண்டும்- என்றார். (எ)

# கொரோனாவை தடுக்கும்
# ஆயுர்வேத சிகிச்சைகள் அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு,ஜன.08

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு ஆயுர்வேத முறைமையில் சிகிச்சை வழங்கும் நடவடிக்கை அடுத்த வாரம் முதல் முன்னெடுக்கப்படும். கொரோனா வைரஸ்தாக்கத்தைக் கட்டுப்படுத்த தேசிய மட்டத்தில் தயாரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை முறைமைகளுக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என, ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் ஆயுர்வேத வைத்திய முறைமை மேம்பாட்டு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த தேசிய மட்டத்தில் இதுவரையில் 37 மருத்துவ சிகிச்சை மற்றும் ஆயுர்வேத ஔடதங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4 மருத்துவ முறைமைகளுக்கு ஆயுர்வேத திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. நாவின்ன ஆயுர்வேத வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு ஆயுர்வேத வைத்திய முறையில் சிகிச்சையளிக்கப்படும் நடவடிக்கை எதிர்வரும் வாரம் முன்னெடுக்கப்படும்.

ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதி பெற்ற சிகிச்சை முறைமை மாத்திரம் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு வழங்கப்படும். கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஆயுர்வேத சிகிச்சை முறைமை மற்றும் ஆயுர் வேத பானம் ஆகியவை தேசிய மட்டத்தில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. இவை தற்போது விஞ்ஞான ஆய்வு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.



மறுபுறம், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களை வீடுகளில் தனிமைப்படுத்தி அவர்களுக்கு ஆயுர்வேத முறைமையில் சிகிச்சை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தேசிய வைத்தியமுறை கட்டமைப்பை மீண்டும்தனித்து வப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது - என்றார். (எ)

# உக்ரைன் சுற்றுலாப் பயணிகளால் இலங்கைக்கு ஆபத்தே அதிகம்

## முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை

கொழும்பு,ஜன.08

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கம் இருந்தால் கொரோனா அச்சுறுத்தல் குறைவான, பணம் செலவழிக்கக்கூடிய நாடுகளில் இருந்தே சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவர வேண்டும். உக்ரைன் சுற்றுலாப் பயணிகளால் இந்த இரண்டையும் எதிர்பார்க்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனாவுடன் எமது அன்றாட வேலைத்திட்டங்களை மேற்கொள்வதுடன் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று சுற்றுலாத் துறையையும் அபிவிருத்தி செய்யவேண்டும். அதில் மாற்றுக்கருத்து இல்லை. சுற்றுலாத்துறை இயங்காமல் இருப்பதால் அதனை நம்பி வாழ்ந்து வரும் இலட்சக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.



அதனால் சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

ஆனால்,தற்போது நாட்டுக்கு வந்திருக்கும் உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகள் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் சுற்றுலாத் துறையைக் கட்டியெழுப்ப முடியுமா? என்பது கேள்விக்குறியே.

இவர்களை நாட்டுக்கு அழைத்துவருவதன் மூலம் பாரிய சிரமத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஏனெனில், கொரோனா அச்சுறுத்தல் அதிகம் இருக்கும் நாடுகளில் உக்ரைனும் ஒன்று. அங்கு இருக்கும் மக்களில் 38 பேரில் ஒருவருக்கு கொரோனா இருப்பதாக அந்த நாடு அறிவித்திருக்கின்றது.

எனவே, அரசாங்கம் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதாகத் தெரி வித்து, அழைத்துக்கொண்டு வந்திருக்கும் உக்ரைன் சுற்றுலாப் பயணிகளால் நாட்டுக்கு ஆபத்தே அதிகம். - என்றார். (எ)

# இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் காத்தான்குடி

ஏறாவூர்,ஜன.08

**சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கும் நோக்கில் மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசம் நேற்று முதல் இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.**



கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் பொதுமக்களின் சுகாதார நலன் கருதி காத்தான்குடி நகரம் கடந்த ஒருவார காலமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இந்தப் பிரதேசத்தில் எடுக்கப்படுகின்ற ரபிட் அன்ரிஜென் பரிசோதனையின் படி தொடர்ந்து தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவது மிகப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இது மிக அவசியமான சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

எனவே தான் இவ்வாறான தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு தொடர்ந்து காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் முடக்க நிலையை முறையாகப் பின்பற்றப்படாமையை எல்லோராலும் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன் இது சம்பந்தமாக நேற்று இடம்பெற்ற மாவட்ட செயலக கூட்டத்திலும் கலந்தாலோசிக்கப்பட் டது.

அதனால் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் சில இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணியினர் எடுத்துள்ளனர் என மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரன் தெரிவித்தார்.

இதனால் நேற்று இரவிலிருந்து மிகக்கடுமையான பாதுகாப்பு நடைமுறைகள் காத்தான்குடி பிரதேச எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனுமதியின்றி வீதியில் நடமாடுகின்றவர்கள் வீட்டுக்கு வெளியே வருபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸாருக்கு இறுக்கமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு அனுமதியின்றி வெளியில் வாகனங்களில் நடமாடுகின்றவர்களது வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமை ஆக்கப்படும்.

அனுமதியின்றி கடைகளைத் திறந்து வியாபாரம் செய்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, நேற்று இரவிலிருந்து முழுமையான இராணுவப் பாதுகாப்பு நடைமுறைகளும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

இந் நடைமுறைகளைப் பின்பற்றாத பட்சத்தில் வருகின்ற வாரங்களில் கூட எமது பிரதேசத்தில் சாதாரண வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத துரதிர்ஷ்டவசமான நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

எனவே, எமது பிரதேசத்தின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டும் எமது மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் சுகாதார நடைமுறைகளைப் பேணி, பொது முடக்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கொரோனா தடுப்புச் செயலணியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அத்தோடு சமூகப்பொறுப்பு சகலருக்கும் உண்டு; நாம் தொற்றுக்குள்ளாகாமல் பிறரையும் தொற்றுக்குள்ளாக்காமலும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்- என்றார். (எ)

## குளத்தில் குளிக்க சென்ற இளைஞன் மூழ்கி மரணம்

திருகோணமலை,ஜன.08

திருகோணமலை - செல்வநாயகபுரம் பகுதியில் குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் அன்புவழிபுரம் - சஹாயமாதா வீதியில் வசித்து வந்த ரவீந்திரகுமார் ஜேனுஷன் (வயது-18) என பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அன்புவழிபுரம் பிரதேசத்திலுள்ள பாம்குளம் என்று அழைக்கப்படும் குளத்துக்கு வழமை போன்று நண்பர்கள் மூன்று பேரும் குளித்ததாகவும், சக நண்பர் ஒருவருடைய செருப்பை குளத்துக்குள் விளையாட்டுக்காக வீசியபோது அதனை எடுத்துச் சென்றவர் நீரில் மூழ்கினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

## ஊடகவியலாளரை தாக்க முயற்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

ஏறாவூர்,ஜன.08

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றைப் பதிவு செய்ய சென்ற ஊடகவியலாளர் மீது இனம்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்த முயற்சி செய்ததுடன் அந்த ஊடகவியலாளரை சுற்றிவளைத்து வீடியோவை அழிக்குமாறும் கூறி அச்சுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது கடந்த 5 ஆம் திகதி காலை ஏறாவூர் பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றை வீடியோ பதிவு செய்துகொண்டிருந்த ஊடகவியலாளர் சுபோஜனை, சிலர் அச்சுறுத்தி வீடியோ எடுக்க விடாது தடுத்ததுடன், ஊடகவியலாளரை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்த முயற்சி செய்துள்ளனர்.

அத்துடன், அவரிடமிருந்த வீடியோ கருவியைப் பறிப்பதற்கு பல தடவைகள் முயற்சி செய்துள்ளனர்.

சுற்றிவளைத்த குழுவினரிடம் தன்னை ஊடகவியலாளர் என்று அடையாளப்படுத்திய போது, ஊடகவியலாளர் என்றால் எங்களுக்கு என்ன? உடனடியாக வீடியோவை அழிக்குமாறு கூறி கடுமையாக எச்சரித்து தாக்குதல் நடத்த முயற்சித்ததோடு, வீடியோ கருவியை பறிப்பதற்கும் முயன்றனர்.

இதனால் பாதிப்புக்குள்ளான ஊடகவியலாளர் அந்த இடத்திலிருந்து பாதுகாப்பாக அகன்று சென்றுள்ளார்.

இதேவேளை, நேற்று பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் மட்டக்களப்பு- கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் தமது கடமைக்கு இடையூறு செய்து தாக்க முயற்சித்ததாக இரண்டு பேர் மீது முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)





## மட்டக்களப்பில் கடும் மழை விவசாய நிலங்கள் பாதிப்பு

மட்டக்களப்பு,ஜன.08

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழையால் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கனமழையால் உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 31 அடியாக உயர்வடைந்துள்ள நிலையில் மூன்று வான் கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் வவுணதீவுப் பகுதியிலுள்ள பெருமளவான வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

அறுவடைக் காலம் நெருங்கியுள்ள நிலையில் வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (எ)

## அன்ரிஜென் சோதனையில் தொற்றுறுதி பி.சி.ஆர். சோதனையில் தொற்றில்லை

### சாய்ந்தமருது நபரின் சடலத்தை வழங்க பின்னடிப்பு

சாய்ந்தமருது,ஜன.08

மரணமடைந்த சாய்ந்தமருதைச் சேர்ந்த நபரின் பி.சி.ஆர். அறிக்கையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றினால் மரணித்தார் என்று கூறப்பட்டு, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சாய்ந்தமருதைச் சேர்ந்த நபரின் பி.சி.ஆர். அறிக்கையை இன்று 8ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தாக்கல் செய்த மனு நேற்றுமுன்தினம் கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஐ.எம்.றிஸ்வான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அதனை விசாரணைக்காக ஏற்றுக்கொண்டு, இக்கட்டளையைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் திகதி நீரிழிவு நோயின் அதீத தாக்கத்தால் மாரடைப்பு ஏற்பட்டு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சாய்ந்தமருதைச் சேர்ந்த நபர் ஒருவர் அன்றைய தினமே வைத்தியசாலையில் மரணித்திருந்தார்.

அன்றைய தினம் அந்த உடல் மீது மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையின்போது கொரோனா தொற்று உள்ளது என்று கூறப்பட்டது.

அதன் பின்னர், மேலும் உறுதிப்படுத்திக் கொள்ள பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளும் பொருட்டு, அந்த உடலிலிருந்து பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு மட்டக்களப்பிலுள்ள விசேட தொற்று நோயியல் நிபுணருக்கு அனுப்பட்டது.

பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை மூலம் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

மேலும், அந்த அறிக்கையில் ஒரு பரிந்துரையாக, இந்த நபரின் உறவினர்களுக்கும் தொடர்புடையவர்களுக்கும் பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகள் செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இந்த நபரின் உறவினர்கள், தொடர்புடையவர்கள் என 125 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அவரது பி.சி.ஆர்.அறிக்கையை வெளிப்படுத்துமாறும் அவருக்கு கொவிட் தொற்று இல்லையெனில், உடலை அடக்கம் செய்வதற்காக கையளிக்குமாறும் அவரது குடும்பத்தினரால் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை அத்தியட்சகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும், தான் மேலும் ஒரு குழுவினருடன் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்து, இதுவரை பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை வெளியிடாமலும் சடலத்தை குடும்பத்தினரிடம் ஒப்படைக்காமலும் தவிர்த்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# ஜோ பைடனுக்கு வெற்றிச்சான்றிதழ்!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ஜோ பைட னுக்கு வெற்றிச் சான்றிதழ் வழங்கப்பட்டு அவரது வெற்றி பாராளுமன்றத்தில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் வெற்றி பெற்ற நிலையில் எதிர் வரும் 20 ஆம் திகதி அவர் ஜனாதிபதியாகப் பதவி யேற்கவுள்ளார். இந்நிலையில், அதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்காக நேற்று பாராளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதனிடையே நேற்றுமுன்தினம் புதன்கிழமை அமெரிக்க பாராளுமன்றில் பெரும் வன் முறை வெடித்தது. இந்நிலையில், ஜனாதிபதி ட்ரம்பின் நடவடிக்கைகளுக்கு துணை ஜனாதிபதியும் கண்டனம் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையைப் பெற்றதையடுத்து, பைடனுக்கு வெற்றிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இரு அவைகளிலும் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையை பெற்றமை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ‘மொடர்னா’ ஊசியும் பாவனைக்கு

# பிரான்ஸில் 38 வீதத்தினரே தடுப்பூசி ஏற்ற சம்மதம்!

பாரிஸ், ஜன. 08

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அமெரிக்காவின் மற்றொரு கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தான ‘மொடர்னா’ ஊசி பாவனைக்கு வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மருத்துவ முகவரகம் “மொடர்னா” தடுப்பூசியை அதன் ஒன்றிய நாடுகளில் பயன்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இந்நாடுகளில் ஏற்கனவே அமெரிக்கா - ஜேர்மனி கூட்டு நிறுவனத்தின் ‘பைசர்-பயோ என்ரெக்’ தடுப்பூசி பாவனைக்கு வந்துள்ளது. அடுத்துவரும் நாட்களில் மொடர்னா தடுப்பு மருந்தும் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. மொடர்னா தடுப்பூசி தயாரிப்புப் பணிகள் பிரான்ஸில் உள்ள அதன் தொழிற்சாலையிலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, இரண்டு தடுப்பூசிகள் பாவனைக்கு வந்துள்ள பிறகும் அவற்றின் மீது மக்களுக்கு இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை. பிரான்ஸ் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று வெளியாகிய கருத்துக் கணிப்பு முடிவுகளின்படி 38 வீதமானவர்கள் மட்டுமே தடுப்பூசி ஏற்றிக்கொள்ள ஆர்வமாக உள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. 45 வீதமானவர்கள் தடுப்பூசியை மறுத்துள்ளனர். 17 வீதமானோர் போடுவதா? விடுவதா? என்ற குழப்பத்தில் உள்ளனர்.

இளவயதினரே தடுப்பூசி ஏற்ற மறுப்பவர்களில் பெரும் பங்கினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்காவில் பரவும் வைரஸ்: தடுப்பூசி செயல்திறனை பாதிக்கும்

கேப்டவுன், ஜன. 08

தென்னாபிரிக்காவில் பரவி வரும் திரிபடைந்த புதிய கொரோனா வைரஸ் முன்னர் பரவியதை விட வேமாகப் பரவக் கூடியது மட்டுமன்றி, கொவிட் - 19 தடுப்பூசிகளின் செயல்திறனையும் பாதிக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் புதிய திரிபு கொரோனா, தடுப்பூசியின் திறனில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தும் என்றே கருதுகிறோம் என குவாசுலு - நடால் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் துலியோ டி ஒலிவேரா கூறினார்.

SARS-CoV-2 இனத்தைச் சேர்ந்த 501Y.V2 எனப் பெயரிடப்பட்டுள்ள புதிய திரிபு வைரஸ் குறித்துப் புரிந்து கொள்ள தென்னாபிரிக்காவில் இடம்பெறும் ஆய்வுகளை பேராசிரியர் துலியோ டி ஒலிவேரா வழிநடத்தி வருகிறார்.

எனினும், சந்தையில் தற்போது கிடைக்கும் தடுப்பூசிகளில் சில வகை, புதிய வகை வைரஸில் இருந்தும் பாதுகாப்பளிக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது என துலியோ டி ஒலிவேரா கூறினார்.

தனது குழு கடந்த 15 நாட்கள் இரவு - பகலாக புதிய திரிபு வைரஸ் குறித்து ஆராய்ந்து வருவதாகவும், விரைவில் இது குறித்து ஒரு தெளிவான முடிவுக்கு வர முடியும் என நம்புவதாகவும் பேராசிரியர் டி ஒலிவேரா தெரிவித்தார்.

# குற்றப் பிரேரணை மூலம் ட்ரம்பை பதவி நீக்க முயற்சி

வாஷிங்டன், ஜன. 08

பதவிக்காலம் முடிவடைய இன்னமும் இரண்டு வாரங்களே இருக்கின்ற நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை அதிகாரத்துக்கு அருகதை அற்றவர் என அறிவித்து அவரைப் பதவியில் இருந்து அகற்ற முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்றன.

அமெரிக்காவின் சில முக்கிய ஊடகங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

பதவியில் இருந்து கொண்டே நாட்டின் ஜனநாயகத்துக்கு எதிராக சதிப் புரட்சிக்கு தனது ஆதரவாளர்களைத் தூண்டியதன் மூலம் ஜனாதிபதி ட்ரம்ப் நாட்டை நிர்வகிக்கும் தகுதியை இழந்துவிட்டார் என்று அமெரிக்கப் பிரமுகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 2020 தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கும் இயலாத மனநிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ள அவரைப் பதவி நீக்கவேண்டும் என்ற கருத்தை சில அமெரிக்கப் பத்திரிகைகளும் ஊடகங்களும் வெளியிட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான



காங்கிரஸ் கட்டடத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த வன்முறைக் கலகங்களுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் தனது ஆதரவாளர்களைத் தூண்டும் விதமாக வெளியிட்ட கருத்துக்களே காரணம் என்று பகிரங்கக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் ட்ரம்ப் தனது கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனத் தெரிவித்து குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து அவரைப் பதவி நீக்குவதற்காக அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் நீதி விவகாரக் குழுவில் இடம்பெறும் குடியரசுக் கட்சிப் பிரதிநிதிகள் துணை ஜனாதிபதி மைக் பென்ஸை தொடர்பு கொண்டுள்ளனர்.

அமெரிக்க அரசமைப்பின் 25ஆவது திருத்தத்தின்படி அமைச்சரவையின் பெரும்பான்மையுடன் துணை ஜனாதிபதி ஒருவர் ஜனாதிபதியை நாட்டை ஆள்வதற்கு தகுதியற்றவர் என அறிவிக்க முடியும். ஆனால், அரசமைப்பின் படியான இத்தகைய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால் ட்ரம்ப்பின் மிகக் குறுகிய பதவிக்காலத்துக்குள் அது சாத்தியம் அல்ல என்று சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

காங்கிரஸ் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறைகளில் முன்னாள் படை வீரரான பெண் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர். 52 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ)



# ஒஸ்லோ நிலச்சரிவு: 7 உடல்கள் மீட்பு

## நாய்க்குட்டி மட்டும் உயிருடன்!

ஒஸ்லோ, ஜன. 08

நோர்வே தலைநகர் ஒஸ்லோவுக்கு அருகே கடந்த வாரம் நிகழ்ந்த களிமண் நிலச் சரிவில் சிக்கிய பத்துப் பேரில் ஏழு பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. நாய்க் குட்டி ஒன்று மட்டும் உயிர் பிழைத்துள்ளது.

காணாமல்போன எஞ்சியவர்களை மீட்கும் முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளன என்ற துயரமான செய்தியை நோர்வே பிரதமர் எர்னா சொல்பேர்க் அறிவித்திருக்கிறார்.

எஞ்சிய மூவரையும் உயிருடன் மீட்க முடியும் என்ற நம்பிக்கை இனியும் இல்லை என்று மீட்புப் பணிகளுக்குத் தலைமை வகிக்கும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்திருக்கிறார்.

நிலச் சரிவினால் உருவாகிய சுமார் 700 மீற்றர் நீளமும், 300 மீற்றர் அகலமும் கொண்ட ஆழக் கிடங்கில் கடும் உறைபனிக் காலநிலைக்கு மத்தியில் கடந்த ஏழு நாட்களாக மிக ஆபத்தான மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

அந்தப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மேலும் ஒரு சிறிய நிலச்சரிவு ஏற்பட்டது. ஆபத்துக்கு மத்தியில் விசேட மீட்புப்படை வீரர்கள் புதையுண்ட வீடுகளின் இடிபாடுகளை நெருங்கிச் சென்று அவற்றில் சிக்கிக் கிடந்த ஏழு உடல்களை மீட்டுள்ளனர். திங்கட்கிழமை நாய்க்குட்டி ஒன்று காயங்கள் இன்றி உயிருடன் மீட்கப்பட்டது. அதனால் ஓரிருவரையாவது உயிருடன் மீட்க முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. ஆயினும், அந்த முயற்சிகள் கைகூடவில்லை.

ஒஸ்லோவுக்கு 30 கிலோ மீற்றர்கள் வடகிழக்கே ஜிஜெர்ட்ரம் எனப்படும் நகர சபை பகுதியில் அஸ்க் என்ற கிராமத்தில் அமைந்திருந்த டசின் கணக்கான வீடுகளே கடந்த புதனன்று இரவு நேரம் திடீரென புதையுண்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சக இராணுவத்தினரை நஞ்சூட்டி கொன்ற சிப்பாய் தப்பியோட்டம்!



காபூல், ஜன. 08

சோதனைச் சாவடியில் தன்னுடன் கடமையில் இருந்த 7 சக இராணுவத்தினரை உணவில் நஞ்சு கலந்து கொன்றுவிட்டு ஆயுதங்களுடன் தப்பிச் சென்றுள்ளார் சிப்பாய் ஒருவர்.

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் கஜினி என்ற மாகாணத்திலுள்ள சோதனைச் சாவடியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அந்த சோதனைச் சாவடியில் 8 இராணுவத்தினர் கடமையில் இருந்தனர். அவர்களில் ஒருவர் மற்ற 7 பேரின் உணவில் நஞ்சை கலந்து கொடுத்துள்ளார்.

இது தெரியாத அவர்கள் அதை உண்டு உயிருக்குப் போராடியபோது அவர்களை சுட்டுக் கொன்றுவிட்டு, சாவடியில் இருந்த ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார் அந்தச் சிப்பாய்.

இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பின்னணி குறித்து ஆப்கான் இராணுவம் விசாரித்து வருகின்றது. (ஐ)



# கிரிக்கெட் உலகின் மூத்த வீரர் மரணம்

ஹமில்டன், ஜன. 08

உலகின் வயதான முதல்தர கிரிக்கெட் வீரரான அலன் பர்கெஸ், தனது 100 ஆவது வயதில் உறக்கத்திலிருந்தபோதே உயிரிழந்தார் என்று நியூஸிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் புதன்கிழமை அறிவித்துள்ளது.

பர்கெஸின் மகள் பிப்பை, தனது தந்தை இறுதிவரை நல்ல நிலையில் இருந்தார் எனவும், செவ்வாயன்று நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியை கிறிஸ்ட்சர்ச்சிலிருந்து தொலைக்காட்சியில் பார்த்தார் என்றும் கூறினார்.

பர்கெஸ் 1920 மே மாதம் முதலாம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் பிறந்தார்.

வலது கை துடுப்பாட்டாளராகவும் இடது கை சுழற்பந்து வீச்சாளராகவும் இருந்த அவர், 1940 - 41 முதல் 1951 - 52 வரை இங்கிலாந்தின் கேன்டர்பரிக்காக 11 முதல் தர போட்டிகளில் விளையாடியுள்ளார்.

1945 ஆம் ஆண்டின் இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஆலன் பர்கெஸ் கிரக்கெட் சேவைகளுக்காக நியூஸிலாந்துக்கு திரும்பினர்.

பர்கெஸின் கிரிக்கெட் வாழ்க்கை 1940 இல் கிறிஸ்துமஸ் தினத்தன்று தொடங்கியது, மேலும் அவர் ஒடாகோ வுக்கு எதிரான போட்டியில் 52 க்கு 6 விக்கெட்களையும் 51 க்கு 3 விக்கெட்களையும் எடுத்தார்.

## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்:

# அவுஸ்திரேலியா 166 / 2



சிட்னி, ஜன 08

இந்திய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் முதல் நாள் ஆட்டம் முடிவில் அவுஸ்திரேலியா 2 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி ஒருநாள், இருபது -20, டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. இதில் ஒருநாள் தொடரை அவுஸ்திரேலியாவும், இருபது -20 தொடரை இந்தியாவும் வெற்றி கொண்டுள்ளன.

தற்போது நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இடம்பெற்று வருகின்றது. முடிந்த இரு போட்டிகளிலும் தலா ஒன்றில் இரு அணிகளும் வெற்றி பெற்றுள்ளன.

இந்நிலையில் மூன்றாவது போட்டி நேற்று சிட்னியில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிம் பெயின் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி அந்த அணியின் அறிமுக வீரர் வில் புகோவ்ஸ்கி, வோர்ணர் இணை தொடக்கம் கொடுத்தது. அணி 6 ஓட்டங்களை எடுத்தபோது, முஹமட் சிராஜின் பந்தில் புஜாராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் வோர்ணர். அப்போது அவர் 5 ஓட்டங்களையே பெற்றிருந்தார்.

7.1 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. எனினும், மீண்டும் ஆட்டம் தொடங்கிய போதும், ஈரம் காரணமாக பாதிக்கப்பட்டது.

தொடர்ந்த ஆட்டத்தில் 23.2 ஓவர்களில் 50 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றது. 97 பந்துகளை எதிர்கொண்ட புகோவ்ஸ்கி அரைச்சதம் அடித்தார். அறிமுகமான முதல் போட்டியிலேயே இவர் அரைச்சதம் அடித்திருந்தார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக புகோவ்ஸ்கி, லபுஸ்சாக்னே இணை 184 பந்துகளை சந்தித்து 100 ஓட்டங்களை பெற்றனர். எனினும் சிறிது நேரத்திலேயே புகோவ்ஸ்கி 62 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அறிமுக வீரர் சயினியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

போட்டி தொடர்ந்தாலும், ஈரம் காரணமாக மைதானம் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் 55 ஓவர்கள் வீசப்பட்ட நிலையிலேயே முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அப்போது அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மார்னஸ் லபுஸ்சாக்னே 67 ஓட்டங்களுடனும், ஸ்ரீவ் ஸ்மித் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இந்தியாவின் பந்து வீச்சில் சிராஜ், சயினி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளனர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். (ஐ)



# ஏன் அழுதார்? முஹமது சிராஜ்

சிட்னி, ஜன. 08

இந்திய - அவுஸ்திரேலியா மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று சிட்னியில் ஆரம்பமானது. போட்டி தொடங்கும் முன்பு இரு அணிகளின் தேசிய கீதமும் ஒலிக்கப்பட்டது.

அச்சமயம் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சிராஜ் கண்ணீர் விட்டார். அவரால் அழுகையை அடக்க முடியாமல் போனது.

இதனால் உருக்கமான ரசிகர்கள், சிராஜுக்கு ஆதரவாக சமூகவலைத்தளங்களில் பதிவுகள் எழுதியுள்ளார்கள்.

26 வயதான சிராஜ், இந்திய அணிக்காக ஒரு ஒருநாள் ஆட்டத்திலும் 3 இருபது - 20 ஆட்டங்களிலும் விளையாடியுள்ளார். ஐ.பி.எல். போட்டியில் கோலி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கும் விளையாடி வருகிறார்.

அவர் அழுதமை குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "தேசிய கீதம் ஒலித்தபோது எனது தந்தையை நினைத்துக் கொண்டேன். நான் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட வேண்டும் என்பது அவரின் ஆசை. இன்று அவர் இருந்திருந்தால் நான் விளையாடுவதைப் பார்த்திருப் பார்." என்றார்.

சிராஜின் தந்தை முகமது கோஸ் அண்மையில் மரணமானார். அச்சமயம் சிராஜ் இந்திய அணியுடன் அவுஸ்திரேலியாவில் இருந்தார். (ஐ)

# மீண்டும் சர்ச்சையில் சிக்கினார் கோலி

புதுடில்லி, ஜன. 08

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு அனுசரணை வழங்கும் நிறுவனத்தில் விராட் கோலி முதலீடு செய்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய கிரிக்கெட் மூன்று வடிவ அணிகளுக்கும் தலைவராக விராட் கோலி செயல்படுகிறார். உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான அவர், விளம்பரம் மூலம் கோடிக் கணக்கில் வருமானம் ஈட்டுகிறார்.

இந்நிலையிலேயே, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு ஆதரவளிக்கும் 'கேலக்டஸ் பன்வேர் ரெக்னோலஜி' நிறுவனத்தின் விளையாட்டு செயலி ஒன்றில் கோலி முதலிட்டுள்ளார்.

இந்த விடயம் சர்ச்சையாகி உள்ளது. விராட் கோலி 2019ஆம் ஆண்டு பெப்ரவரியில் இருந்து அந்த நிறுவனத்தில் முதலீடு செய்திருக்கிறார். இந்த தகவல் தற்போதுதான் வெளியாகி இருக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாக கிரிக்கெட் சபை விராட் கோலியிடம் விளக்கம் கேட்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)




IPL

# ஐ.பி.எல். ஏலம் பெப்ரவரியில்!

மும்பை, ஜன. 08

பதினான்காவது ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம் பெப்ரவரி 10ஆம் திகதி நடக்க வுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். இருபது - 20 கிரிக்கெட் போட்டி 2008ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்தியாவில் நடக்கும் இந்தப் போட்டி, கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடந்தது.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான போட்டி இந்தியாவிலேயே நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அண்மையில் நடந்த கூட்டத்தில், இந்தியாவில் போட்டி நடந்தால் குறைந்த எண்ணிக்கையிலான மைதானங்களில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதனிடையே, ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி இடம்பெறவுள்ளது. முன்னதாக எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் அணிகள் தாங்கள் தக்க வைத்துக்கொள்ளும் வீரர்களையும் விடுவிக்கும் வீரர்களையும் அறிவிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாடு இராணுவ மயமாவதற்கு ஒருபோதுமே இடமளியோம்

## ராஜித எம்.பி. எதிர்ப்பு



**கொழும்பு,ஜன.08**

**கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தல் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு தற்போது 25 மாவட்டங்களுக்கும் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது மாவட்டமட்டத்தில் காணப்படும் இந்த நியமனங்கள் எதிர்வரும் காலங்களில் பிரதேச சபை மட்டத்திலும் முன்னெடுக்கப்படும். எவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டாலும் இலங்கையை இராணுவமயப்படுத்த பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் ஒருபோதும் இடமளியோம் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இதுவரையில் 48 இராணுவ வீரர்கள் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நியமனங்கள்மூலம்இலங்கை இராணுவமயமாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வழங்கப்பட்டுள்ள 25 மாவட்டங்களுக்கான கொரோனா ஒழிப்பு ஒருங்கிணைப்பு அதிகாரிகள் மாவட்ட செயலாளர்களை விட அதிகாரம் மிக்கவர்களாகவுள்ளனர்.

இவர்களால் எவ்வாறு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்? வைரஸ் பரவலைக்கட்டுப் படுத்துவதற்கு ஒத்துழைப்பை மாத்திரமே இவர்களால் வழங்க முடியும்.

இந்த நியமனங்கள் அநாவசிய மானவை. காரணம், ஒவ்வொரு மாகாணங்களிலும், மாவட்டங்களிலும் பல மட்டங்களில் சுகாதார அதிகாரிகள் உள்ளனர்- என்றார். (எ)

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் உணவுத் தட்டுப்பாடு

வவுனியா,ஜன.08

வவுனியா பட்டாணிச்சூரில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அந்தக் கிராமம் முழுமையாகத் தனிமைப்படுத்தப் பட்டுள்ளது. இந்நிலையில் அங்கு வசிக்கும் மக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் விசனமடைந்துள்ளனர் என வவுனியா நகர சபை உறுப்பினர்களான அப்துல் பாரி மற்றும் லரீப் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

எமது கிராமத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் கிராமம் திடீரென தனிமைப் படுத்தப்பட்டது.

அவ்வாறு தனிமைப்படுத்தப் பட்ட நிலையில், இங்குள்ள 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 4,500 இற்கும் மேற்பட்டவர்கள் தற்போது உணவுத்தேவையை பூர்த்தி செய்ய முடியாதுள்ளனர்.

பிரதேச செயலக அதிகாரிகள் யாரும், எமது மக்களைக் பார்வையிடவில்லை. அவர்களுக்கான தேவைகள் தொடர்பில் ஆராயவுமில்லை. குழந்தைகளுக்கு பால் மா மற்றும் வயோதிபர்களுக்கான உணவு, மருத்துவம் என்பவற்றுக்கு பெரும்நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே, தனிமைப்படுத்தப் பட்ட மக்களை மனிதாபிமானத்தோடு நோக்குங்கள் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)



# முகக்கவசம் இன்றி கைதுசெய்யப்பட்ட 1060 பேரில் 14 பேருக்கு கொரோனா

## பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு,ஜன.08

மேல் மாகாணத்தில் முகக் கவசம் அணியாமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 1060 பேரில் 550 பேருக்கு மேற்கொள்ளப் பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 14 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முகக்கவசம் அணியாத நபர்கள் தொடர்பில் மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய நீர்கொழும்பு , கொச்சிக்கடை, பமுனுகம, கொடதெனியாவ, திவுலப்பிட்டி , கம்பஹா, மினுவாங்கொடை , கணேமுல்ல, மீரிகம , வெயாங்கொடை, கிரிபத்கொடை, பேலியகொடை, கடவத்த, வத்தளை, பியகம, சப்புகஸ்கந்த, களனி, மீகஹாவத்த, பொரலஸ்கமுவ, வெல்லம்பிட்டி, ஹங்வெல்ல, நவகமுவ, கொஹத்தட்டுவ, கஹத் துட்டுவ, பிலியந்தல, மத்தே கொடை, களுத்துறை தெற்கு, அளுத்கம, மத்துகம, பாணந்துறை மற்றும் பண்டாரகம ஆகிய பகுதிகளிலே இந்த சுற்றிவளைப்புக்கள் இடம்பெற்றன.

இதன்போது முகக்கவசம் அணியாமை தொடர்பில் 1060 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுள் 550 பேருக்கு அன்ரிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோது 14 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் மாத்திரமின்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முகக்கவசம் அணியாத மற்றும் சமூக இடைவெளியைப் பேணாத நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் 81 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 2253 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகக்கவசம் அணியாத மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை தொடர்பில் கைது செய்யப்படும் நபர்களுக்கான அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதனால், அதுதொடர்பில் சுகாதாரப் பிரிவினர், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸார் அழைப்பு விடுத்தால், அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன்போது விவரங்களைத் தெரிவிக்க வேண்டி ஏற்பட்டால், உண்மைத் தகவல்களை மாத்திரமே வழங்க வேண்டும்.

போலித் தகவல் வழங்கும் நபர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் குற்றவியல் சட்ட விதிகளுக்கமைய சட்டநடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.(எ)

# சர்வதேச சுயாதீன புலனாய்வு பொறிமுறையே வேண்டும்

## 250 இற்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை

லண்டன்,ஜன.08

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் சர்வதேச சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையை உருவாக்குவதற்கான தீர்மானம் ஒன்றினை கொண்டுவருமாறு பிரித்தானிய அரசிடம் 250 இற்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்புக்களால் ஒருமித்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட இராஜதந்திரிகள் மற்றும் புத்திஜீவிகளின் ஆலோசனைப்படி, பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்கள், கல்விமான்கள், மதத்தலைவர்கள், மனித உரிமைச்செயல்பாட்டாளர்கள் எனப் பலருடன் பல கட்டங்களாக நடைபெற்ற தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் முடிவில் அனைவரின் ஏகோபித்த ஆதரவுடன் இந்த நகர்வு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இதனை தமிழர் ஒருங்கிணைப்பு பேரவை, உலக தமிழர் வரலாற்று மையம், தமிழ் தகவல் மையம், தமிழ் இளையோர் அமைப்பு, பிரித்தானிய தமிழ் வர்த்த சம்மேளனம், தமிழ் சொலிடாரிட்டி, பிரித்தானிய தமிழர் ஒன்றியம், பழைமைவாத கட்சிக்கான பிரித்தானிய தமிழர்கள், தொழில்கட்சிக்கான தமிழர்கள், மிதவாத கட்சிக்கான தமிழர்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரித்தானிய கிளை, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரித்தானிய கிளை, இனப்படுகொலை தடுப்பு மற்றும் தண்டிப்புக்கான சர்வதேச மையம், அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையம், தமிழர் கலை பண்பாட்டு நடுவம், தமிழீழ மாவீரர் பணிமனை ஐக்கிய இராச்சியம், மக்கள் நலன் காப்பகம், உலக தமிழர் வரலாற்றுமைய மகளிர் அமைப்பு, அகதிகள் உரிமைகள் அமைப்பு, வீரத்தமிழர் முன்னணி பிரித்தானியா, நாம் தமிழர் பிரித்தானியா, தேசிய விடுதலைக்கட்சிக்கான தமிழர்கள் உட்பட்ட பிரதான அரசியல் மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் ஒருமித்து ஒற்றுமையுடன் முன்னெடுத்திருந்தன.

தற்போது இலங்கை விவகாரத்தில் தீர்மானத்தை கொண்டு வரும் அதிகாரம் பிரித்தானியாவின் கையில் உள்ளது. இந்நிலையிலேயே, எவ்வாறான தீர்மானத்தை பிரித்தானியா கொண்டு வரவேண்டும் எனவும் அதற்கு பிரித்தானிய தமிழர்கள் என்ன செய்யவேண்டும் எனவும் பல புத்திஜீவிகள், சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் வழங்கிய ஆலோசனைப்பிரகாரம், பன்முக கோரிக்கைகளால் ஏற்பட கூடிய பின்னடைவுகளை தவிர்க்கும் முகமாகவும், ஐ.நா மனித உரிமை சபையின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட, நடைமுறைச் சாத்தியமானதுமான ஒற்றைக் கோரிக்கையாக இந்த ஆவணம் துறைசார் நிபுணர்களால் வரையப்பட்டுள்ளது.

அந்த வகையில் ‘மியன்மாருக்காக நிறுவப்பட்டதைப் போன்ற ஒரு சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறையை உருவாக்க 46 ஆவது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒரு தீர்மானம் எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மிகவும் கடுமையான சர்வதேச குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை பற்றி விசாரித்து, ஆதாரங்களைச் சேகரித்து குற்றவியல் வழக்குக்கான கோப்புகளை தயாரிக்கக் கோருகிறோம். அத்தோடு, இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களையும் விசாரணை செய்து, செப்ரெம்பர் 2015 இன் அறிக்கையில் உள்ள தகவல்கள் மற்றும் ஆதாரங்களைப் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்பதே இந்த ஆவணத்தின் சாராம்சமாகும்.

குறுகிய கால அவகாசம்காரணமாக ஏனைய அமைப்புக்களை இணைத்துக்கொள்ள முடியாத போதிலும், அவர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு, அவர்களின் ஆதரவும் கிடைக்கும் பட்சத்தில், இரணரடாவது தொகுதி கையெழுத்துக்கள் அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இதனால் பிரித்தானியா வாழ் அனைத்து தமிழ் புலம்பெயர் மக்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த கூட்டு கோரிக்கைக்கு, பிரித்தானியாவிலுள்ள அனைவருடைய ஆதரவும் தேவை என வும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.(எ)







## செம்பியன்பற்று வடக்கு மக்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 08

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு கிராம சேவகர் பிரிவிலிருந்து தனிப்பனை எனும் கிராமத்தை உருவாக்கி, அதில் தனியான கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அந்தப் பொதுக்கூட்டம் இன்று இடம்பெற ஏற்பாடாகியுள்ள நிலையில் அதனை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோரியும் நேற்று முற்பகல் 10:30 மணிக்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக செம்பியன்பற்று வடக்கு கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அத்துடன் பிரதேச செயலகத்துக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதேவேளை, தமக்கு தொடர்ந்தும் அநீதி இடம் பெறுவதாலேயே தாம் தனியான கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகளை சட்ட ரீதியாக மேற்கொண்டு வருவதாகவும், ஏற்கனவே தனியான விளையாட்டுக்கழகம், ஆலய நிர்வாகம் போன்ற அமைப்புகள் உள்ளதாகவும் செம்பியன்பற்று வடக்கின் தனிப்பனை கிராம வாசிகள் தெரிவித்தனர்.




**காலை**

5.15 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி - தரம் 07 - கணிதம்
6.45 மணி - தரம் 08 - தமிழ்
7.30 மணி - தரம் 09 - கணிதம்
8.15 மணி - தரம் 10 - தமிழ்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
7.00 மணி - க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

# தடுப்பூசியை விரைவில் இலங்கைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜெய்சங்கரிடம் ரணில் கோரிக்கை



கொழும்பு, ஜன.08

**இலங்கைக்கு கூடிய விரைவில் தடுப்பூசியை வழங்க டில்லி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அத்தோடு, கொவிட் வைரஸ் பரவலினால் பிராந்தியத்தின் அனைத்து நாடுகளுமே பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில், இலங்கை மற்றும் இந்தியா பொருளாதார ரீதியில் மிக நெருக்கமாக ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையில் தீவிரமடைந்துவரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த இந்திய ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதுடன், கொரோனா தடுப்பூசியை கூடிய விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

வைரஸ் தொற்றினால் இரு நாடுகளுமே எதிர்க்கொண்டுள்ள சவால்கள் குறித்து குறித்த பேச்சில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், கொவிட் தடுப்பூசியை இலங்கைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைளில் டெல்லி கூடிய கவனம் செலுத்தும் என இதன்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## 'ஐ றோட்' திட்டக் குழுவினர் மாநகர முதல்வரை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 08

யாழ். மாநகர சபை எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் ஐ றோட் திட்டம் தொடர்பில் மேயர் மணிவண்ணனுடன் பொறியிலாளர்கள் குழு நேற்று சந்தித்துப் பேசியது.

இந்தத் திட்டத்தில் 17 வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை - அரசடி வீதி இணைப்பு வீதியில் ரயில் பாதைக்கு அருகே வரும் பகுதிக்கு அந்தத் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கவில்லை.

இதனால், அந்த வீதிக்காக ஒதுக்கப்பட்ட நிதி புங்கன்குளம் வீதிக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பிறவுண் வீதியில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, மக்கள் பயன்பாட்டில் அதிகமுள்ள வீதிகள் அடுத்தடுத்து புனரமைக்குமாறும். அதற்கான வீதிகளின் முன்னுரிமை பட்டியலை தாம் தயாரித்து வழங்குவார் என்றும் முதல்வர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஐ றோட் திட்டத்தின் வடமாகாண பொறியிலாளர், யாழ். பகுதி பொறியிலாளர், மாநகர ஆணையாளர் ஜெயசீலன், மாநகர பொறியிலாளர் சுரேஸ்குமார், மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

## ஜீவன் தொண்டமானையும் சந்தித்து பேசிய ஜெய்சங்கர்

கொழும்பு, ஜன. 08

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையில் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

கொழும்பில் உள்ள இந்திய தூதுவரின் இல்லத்தில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு நடந்தது.

இதன்போது இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மலையக தமிழர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக இந்தியா தொடர்ந்தும் உதவியளிக்கும் எனச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டுத்துறை மேம்பாடுகளுக்கும் இந்தியாவின் ஒத்துழைப்புகள் தொடரும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## வெள்ளம் பாதித்த குடும்பங்களுக்கு செஞ்சிலுவை சங்கம் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன. 08

புரெவிப் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு நிவாரணமாக 10 ஆயிரம் ரூபாவை வங்கி ஊடாக வழங்க இலங்கை செஞ்சிலுவை சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேபோன்று, வெள்ளம் புகுந்த கிணறுகளை துப்புரவு செய்யும் பணியையும் அது முன்னெடுக்கவுள்ளது. இதற்காக 500 கிணறுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மருத்துவ வசதி குறைந்த தீவுப் பகுதி, வடமராட்சி கிழக்கு பகுதிகளில் மருத்துவ முகாம்களை நடத்தவும் அந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது. (ஐ)

## பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்பட்டவர்கள் மாத்திரமே வவுனியாவில் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர்

வவுனியா, ஜன. 08

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு நேற்றும் இன்றும் புளியங்குளம் இந்துக்கல்லூரியில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இப்பரிசோதனைகளில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் , அதிபர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர்.

குறித்த கல்வி வயலத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களில் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே பாடசாலைகளுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.ஏனையவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வி . திலீபன் தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்றுக் காலை 8 மணிமுதல் வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் புளியங்குளம் இந்துக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டன. நேற்று இப்பரிசோதனை வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வெளிமாவட்டங்களிலிருந்து 150 ஆசிரியர்கள் கற்பித்தலுக்காக வருகின்றபோதிலும் நேற்று பரிசோதனைக்காக 34 ஆசிரியர்களே வருகை தந்திருந்தார்கள். எனவே, இன்றும் குறித்த பரிசோதனை இடம்பெறவுள்ளதால் வெளி மாவட்டத்திலிருந்து வருகை தராதவர்களும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது .

எனினும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டு கொரோனா தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்ட பரிசோதனை அறிக்கையை வைத்திருப்பவர்கள்மாத்திரமே பாடசாலைகளுக்குள் சென்று கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்-என்றார்.

ஈழநாடு
Eelanadu

## கொரோனாவால் உயிரிழந்தோரின்:
# உடலங்கள் அடக்கம்; ஒருபோதும் இல்லை
### சுகாதார அமைச்சர் பாராளுமன்றில் உறுதி



**கொழும்பு, ஜன. 08**
**கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய எந்த சூழ்நிலையிலும் அனுமதிக்க முடியாது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.**

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனாவால் உயிரிழந்தவரின் உடல்களை அகற்றுவது தொடர்பில் ஆராயும் நிபுணர் குழு தகனம் செய்வதற்கு மட்டுமே பரிந்துரைத்துள்ளது. எனவே சமூக, மத, அரசியல் அல்லது தனிப்பட்ட காரணங்களால் இந்த முடிவை அரசாங்கம் மாற்றிக் கொள்ளாது என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

மேலும், நிபுணர் குழுவின் பரிந்துரைகள் தெளிவானவை என்று அமைச்சர் வன்னியராச்சி கூறியதுடன், இந்த முடிவில் திருத்தம் ஒருபோதும் திருத்தம் செய்ய முடியாது என்றும் தெரிவித்தார். (ஐ)

## புலிகளின் கிளைமோர் சுழிபுரத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 08

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தயாரிப்பான அதிசக்தி வாய்ந்த கிளைமோர் உள்ளிட்ட வெடிபொருள்கள் நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு உள்ளன.

யாழ்ப்பாணம், சுழிபுரம் மத்தியில் உள்ள காணி ஒன்றை உரிமையாளர் நேற்று முன்தினம் துப்புரவு செய்த போது இவை தென்பட்டுள்ளன.

இது தொடர்பில் அவர் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் அளித்தார்.

சம்பவ இடத்துக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸார், மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் அனுமதியுடன் கிளைமோரை மீட்டவர்கள் மீதமுள்ள கைக்குண்டுகள் உள்ளிட்ட வெடிபொருள்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)



## தெற்காசியாவிலேயே பெருந்தொகை போதை மாத்திரைகள் நேற்று சிக்கின

கொழும்பு, ஜன. 08

13.5 கோடி ரூபா பெறுமதியான சுமார் 18 ஆயிரம் போதைப்பொருள் மாத்திரைகளை சுங்கத் திணைக்களம் நேற்று கைப்பற்றியது.

இந்தப் போதை மாத்திரைகள் பெல்ஜியத்திலிருந்து நாட்டுக்கு அனுப்பப்பட்டன என்றும். அஞ்சல் பரிவர்த்தனை மூலமாகவே இவை கொண்டு சென்று சேர்க்கப்பட இருந்தன என்றும் அதில் குறிப்பிடப்பட்ட முகவரி போலியானது என்றும் தெரிய வந்துள்ளது.

மேலும், இவை விலங்குகளுக்கான உணவு என்று பொதி செய்யப்பட்டு நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சுங்கத் திணைக்களம் இதுவரை கைப்பற்றியதில் மிகப் பெரியளவான போதை மாத்திரைகள் இதுவாகும்.

அதுமட்டுமின்றி, தெற்காசியாவின் ஒரு நாட்டிலிருந்து இவ்வளவு பெரிய அளவிலான போதைப்பொருள் மாத்திரைகள் கைப்பற்றப்படுவது இதுவே முதல் முறையாகும் என்று சுங்க செய்தித் தொடர்பாளர் சுனில் ஜெயரத்ன தெரிவித்தார். (ஐ)



# நாட்டில் பயிரிடக்கூடியவற்றை பயிரிடுவதால் நமக்கே நன்மை

கொழும்பு, ஜன. 08

நாட்டில் பயிரிடக்கூடியவற்றை பயிரிடுவதன் மூலம் வெளிநாட்டு விவசாயிகளுக்கு செல்லும் பணம் நமது விவசாயிகளுக்கு கிடைக்கும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மீண்டும் கிராமத்திற்கு தேசிய வேலைத்திட்டத்தின் அரச அதிகாரிகளை தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "பாரம்பரியமாக விவசாய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் சிரமங்கள் காரணமாக தற்போதைய தலைமுறை விவசாயத்திலிருந்து விலகிச் செல்கிறது. அறுவடைக்கு அதிக விலை, தொழில்நுட்ப அறிவு, நீர் முகாமைத்துவம், உள்ளூர் விதை உற்பத்தி, சந்தைப்படுத்தல், போக்குவரத்து வசதிகள், மற்றும் கரிம வேளாண்மையில் ஈடுபட விவசாயிகளை ஊக்குவித்தல் போன்ற முறைகள் மூலம் பிரச்சினையை தீர்ப்பதில் அதிகாரிகள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்", என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)



## வடமராட்சியில் குண்டு மீட்பு

பருத்தித்துறையில் மீனவர்களால் மீன்பிடி வலையில் இணைத்து பயன்படுத்திய குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டு நேற்று மீட்கப்பட்டது. இதனால், ஏற்படவிருந்த பெரும் அனர்த்தம் அதிர்ஷ்டவசமாகத் தவிர்க்கப்பட்டது.

இந்தச் சம்பவம் இது குறித்து தெரியவருபவை வருமாறு:

வடமராட்சி, பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டடிப் பகுதியில் இருந்து குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. நேற்று வியாழக்கிழமை மாலை அப்பகுதியில் குண்டு ஒன்று காணப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதையடுத்து பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு குண்டு செயல் இழக்கச் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கண்டறியப்பட்ட குண்டானது குறித்த மீனவர்களால் மீன் பிடி வலையில் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த பொருள் குண்டு என்பதை அறியாது மீன்பிடி வலையில் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்த நிலையிலேயே தற்போது கண்டறியப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

மீன்பிடி நடவடிக்கைக்காக இதனை இணைத்து பயன்படுத்தியபோது வெடித்திருந்தால் பெரும் அனர்த்தம் ஏற்பட்டிருக்கும். ஆனால், இப்போது இது கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டமையால் நேரவிருந்த பெரும் அனர்த்தம் அதிர்ஷ்டவசமாக தவிர்க்கப்பட்டுள்ளது. (ஐ -2)

## ரூ.1000 சம்பள பேச்சு இணக்கமின்றி முடிவு

கொழும்பு, ஜன. 08

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான 1000 ரூபா சம்பள பேச்சு எவ்வித இணக்கப்பாடுமின்றி முடிவடைந்தது.

சம்பள உயர்வு தொடர்பில் நேற்று தொழில் அமைச்சில், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் பேச்சு இடம்பெற்றது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை 2021 ஜனவரி முதல் 1000 ரூபாவாக அதிகரிக்க முன்மொழிவதாக வரவு செலவுத் திட்ட உரையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த விடயத்திற்கு அமைவாக இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட தரப்பினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட தரப்பினரும் முதலாளிமார் சம்மேளன பிரதிநிதிகளும் அமைச்சின் அதிகாரிகளும் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றனர்

இந்தப் பேச்சு எவ்வித இணக்கப்பாடும் இன்றி முடிவிற்கு வந்ததாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தொழில் அமைச்சர் என்ற வகையில், மாற்று வழிகளைக் கண்டுபிடித்து முதலாளிமார் சம்மேளனத்திற்காக புதிய தீர்மானங்களை எடுக்க சட்டமூலத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

மணமகன் விபரம்
15613 | வே | 1983
புங்குடுதீவு | இந்து
Accountant | UK
அவிட்டம் (கும்பம்)

15682 | வே | 1987
அரியாலை | இந்து | செவ் :12
Gov Grade Officer | SL
கேட்டை (விருச்சிகம்)

15598 | வே | 1988
இணுவில் | இந்து
Quantity Surveyor | UK
புனர்பூசம் (மிதுனம்)

16132 | வே | 1990
இணுவில் | இந்து | செவ் : 8
QS | Australia | 168 செ.மீ
அனுஷம் (விருச்சிகம்)

16093 | வே | 1992
திருநெல்வேலி | இந்து
bank Officer | SL | 178செ.மீ
மகம் (சிம்மம்) ; செவ் : 2

மணமகள் விபரம்
15910 | வே | 1989
சுழிபுரம் | இந்து | 162 செ.மீ
Teacher | SL | சூ-செவ் : 9
சித்திரை (துலாம்)

16069 | வே | 1991
சரவணை | இந்து | செவ் :8
Civil Engineer ;சிங்கப்பூர்
மிருகசீரிடம் (இடபம்)

15904 | வே | 1994
இந்து | SL | சூ-செவ் : 4
Executive in Bank
சதயம் (கும்பம்) | 165 செ.மீ

15886 | க | 1998
கொழும்பு | இந்து | சூ-செ: 9
Trainee at bank | SL
பரணி (மேடம்) | 162 செ.மீ

16096 | வி | 1998
கரவெட்டி | இந்து | 145 செ.மீ
A/L | SL | சூ-செவ் : 6
கேட்டை (விருச்சிகம்)

20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
*6.00 மணி* : பக்திபாடல்
*6.30 மணி* : வணக்கம் டான்



*6.31 மணி* : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
*6.35 மணி* : மதம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
*7.05 மணி* : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
*7.15 மணி* : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூார்
*7.20 மணி* : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகள்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை - நேரலை
*10.30 மணி* : தொடர் நாடகம் - DOCTOR JOHN
*11.00 மணி* : பாரதீ

**பகல்**
*12.00 மணி* : சிரிக்கலாம் வாங்க - நேரலை
*1.00 மணி* : துறைக்கு அப்பால்(மறுஒளிபரப்பு)
*1.30 மணி* : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
*4.30 மணி* : குட்டீஸ் தர்பார் - நேரலை



*5.30 மணி* : Short Film
*6.00 மணி* : ஹொலிவுட் சுப்பர் 10



**இரவு**
*7.00 மணி* : Tiktok
*7.30 மணி* : பத்துக்கு பத்து
*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*9.00 மணி* : அந்தக்காலம் இந்தக்காலம் - சுயதொழில் முன்னேற்றமும் பரிநாம மாற்றமும்.



*10.00 மணி* : யாவரும் கேளீர்

**காலை**
*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
*1.00 மணி* : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி மற்றும் செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**
*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை

**இரவு**
*7.00 மணி* : ஓய்வெடு நிலவே
*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - கணிதம்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - தமிழ்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
*12.00 மணி* : தரம் 10 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 09 - கணிதம்
*2.00 மணி* : தரம் 06 - ஆங்கிலம்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**
*7.00 மணி* : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

**காலை**
*5.00 மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*07.00 மணி* : இன்றைய சிந்தனை
*07.05 மணி* : இன்றைய நாள்
*07.20 மணி* : சின்மய சிந்தனை
*07.30 மணி* : மங்கள இசை
*08.00 மணி* : அருளுரை
*08.30 மணி* : திருவாசகம்
*09.00 மணி* : யாழ்ப்பாணம் வடலியடைப்பு சித்தி விநாயகர் கோவில் திருவிழா
*10.00 மணி* : ஐயப்பன் பாடல்கள்
*10.30 மணி* : பஜனை
*11.00 மணி* : பக்திமலர்
*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : யாழ்ப்பாணம் சுன்னாகம் சொர்ண நவகாளி அம்மன் கோவில் திருவிழா
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்
*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை
*08.00 மணி* : யாழ்ப்பாணம் வடலியடைப்பு சித்தி விநாயகர் கோவில் திருவிழா

**காலை**
*7.00 மணி* : ஆலயப் பாடலகள்
*8.00 மணி* : ஜெபமாலை
*9.00 மணி* : மாதா மன்றாட்டு மாலை
*10.00 மணி* : திருப்பலிப் பாடல்கள்
*10.30 மணி* : புனித மிக்கேல் மன்றாட்டு
*11.30 மணி* : ஜெபமாலை

**பகல்**
*12.00 மணி* : பாடல்
*1.00 மணி* : மட்டக்களப்பு திருப்பலி
*2.00 மணி* : திருகோணமலைத்திருப்பலி
*3.00 மணி* : பாடல்
*4.30 மணி* : திருகோணமலை திருப்பலி

**காலை**
*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஸ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*